Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-22 | 06-01-2005 | வியாழக்கிழமை | ஓசை -323


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: 024-222 4247 (சி-11120)

## இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் சந்திப்பு



(அலுவலக செய்தியாளர்)

வத்திக்கான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் கலாநிதி மறியோ செனாரி அவர்களுக்கும், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் இடையேயான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் நடைபெற்றுள்ளது.

இக் கலந்துரையாடலானது நேற்று மாலை 3.00 மணியளவில் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்றுள்ளது. மேற்படி கலந்துரையாடலில் வத்திக்கான் தூதுவர் மறியோசெனாரி அரசியல்துறைப் பொறுப்பாளரிடம் கருத்துத் தெரிவிக்கையில்தான் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பகுதியைச் சென்று பார்வையிட்டதாகவும் அங்கு நடைபெற்ற அனர்த்தம் மிகவும் மோசமானது எனவும் அதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனது அனுதாபத்தைப் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இவ்வாறு பாதிக்கப்பட்ட பிரதேசத்தைப் பார்வையிட்டதற்கும், நலன்புரிநிலையங்களிலுள்ள மக்களைச் சென்று பார்வையிட்டதற்கும் தூதுவருக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் நன்றி தெரிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## —அனர்த்தத்திற்குள்ளான இந்தோனேசியா, இலங்கையில்—

# சர்வதேச பிராந்திய வல்லரசுகள் தமது

# ராணுவ ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்சி!

## படைத்துறை நோக்கர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

**சுனாமி அலைகளால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட இந்தோனேசியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் தமது இராணுவ வல்லாதிக்கத்தை நிறுவும் முயற்சியில் உலக மற்றும் பிராந்திய வல்லரசுகள் ஈடுபட்டுள்ளதாக படைத்துறை நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.**

அமெரிக்கா இரண்டு யுத்தக் கப்பல்கள் மூலம் 13000 படைகளை இந்த இரு நாடுகளுக்கும் அனுப்பியுள்ளது. இலங்கைக்கு 1500 அமெரிக்க படையினரே அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் இந்த எண்ணிக்கை சில மடங்கு

(12ஆம் பக்கம் பார்க்க)


## முல்லை நகரைக் கட்டியெழுப்ப திட்டமிடல் குழு நாளை முல்லை விஜயம்

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அலைத் தாக்கத்தினால் அழிவுக்குள்ளான முல்லை நகரை மீளக்கட்டியெழுப்புவதற்கான திட்டமிடல் குழு நாளை முல்லைத்தீவுக்கு விஜயம் செய்கிறது.

அழிவுற்ற முல்லைத்தீவு நகர் முன்னர் முறையான திட்டமிடலின்றி அமைக்கப்பட்டதன் விளைவாகவே இப்பெரும் அழிவைச் சந்தித்ததென்பது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் மீண்டுமொரு முறை அவ்வாறு ஏற்படவுள்ள அழி

(12ஆம் பக்கம் பார்க்க)



## - இடம்பெயர்ந்த மக்களைக் குடியமர்த்த-

## மாதிரிக் கிராமங்களை அமைக்க இடங்கள் தெரிவு செய்யப்பட்டன

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அலையின் தாக்கத்தால் முற்றாக அழிக்கப்பட்ட முல்லை நகரை விட்டு இடம்பெயர்ந்து நலம்புரி நிலையங்களில் வாழும் மக்களை மாதிரிக் கிராமங்கள் அமைத்துக் குடியமர்த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான கலந்துரையாடல் நேற்று மாலை 3.30 மணிக்கு முல்லைத்தீவில் அமைந்துள்ள கடற்புலிகளின் தற்காலிக மீட்புப் பணிமுகாமில் நடைபெற்றது. கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இவ் ஒழுங்கமைப்பு ஒன்று கூடலில் சுனாமியின் தாக்கத்தினால் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், பொது மண்டபங்களிலும் தங்க

(12ஆம் பக்கம் பார்க்க)

## த.பு.க. பாராமரித்த முகாம்களை

## படையினர் பொறுப்பேற்க முயன்றதால் திருமலையில் முறுகல் நிலை

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் திருகோணமலையில் முறுகல் நிலை தோன்றியுள்ளது இதுவரைகாலமும் தமிழர் புனர்வாழ்வு கழகத்தினால் பராமரிக்கப்பட்டு வந்த அகதி முகாம்களைப் படையினர் பொறுப் பேற்கப்போவதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்தே இந்த நிலை தோன்றியுள்ளது நேற்று முற்பகல் 10 மணி முதல் 11 மணி வரையில் திருகோணமலையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றின்போது இராணுவத்தினர் தாம் சனாதிபதியின் பணிப்

(12ஆம் பக்கம் பார்க்க)

### வீரவணக்கம்

26-12-2004அன்று முல்லைத்தீவுப் பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக கடற்புலிகளின் துணைப்படை வீரர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

2ஆம் லெப்ரினன்ட் சாள்ஸ்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி சுனாமி அனர்த்தப் பகுதியை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் பார்வையிட்டார்

(வடமராட்சி)

சுனாமி கடற்கொந்தளிப்பினால் வடமராட்சி கிழக்கு கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட அழிவுகள், சேதங்களை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், அவருடன் வந்த குழுவினரும் பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட மீனவர்களையும் சந்தித்து உரையாடினார்கள்.யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்திருந்த அக்குழுவில் ரணில் விக்கிரமசிங்கவுடன் முன்னாள் அமைச்சரும், ஐ.தே.க. கம்பஹா மாவட்ட எம்.பி யுமான டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன, எதிர்க்

(12ஆம் பக்கம் பார்க்க)



படம் : காங்கேயன்

வரிவிளம்பரம்

## தவறிவிட்டது

வட்டக்கச்சி நாவலர் வீதிப் பகுதியில் வசிக்கும் இராமநாதன் பத்மரூன் அவரது அடையாள அட்டையும் (இல. 833344994V)பயண அனுமதிப்பத்திரம் மற்றும் சில ஆவணங்கள் அடங்கிய பயணப்பை கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளைக்கு முன்பாக தவறவிடப்பட்டுள்ளது. கட்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது மக்கள் வங்கிக் கிளையில் ஒப்படைக்கும் வண்ணம் கேட்டுள்ளார். (5463)

## தவறிவிட்டது

வட்டக்கச்சி சிவிச் சென்ரர் பகுதியில் வசிக்கும் ஜெ.மேரி திரேசா ஜெயமணி அவரது அடையாள அட்டை (இல 565553607V) மற்றும் வீடமைப்பு அதிகார சபையில் வழங்கப்பட்ட சிவப்பு நிற அட்டையும், கரைச்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கிப் புத்தகமும் கிளிநொச்சி 155ஆம் கட்டைக்கும். காவல்பணிமனைக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் காவல் பணிமனையில் ஒப்படைக்கும் வண்ணம் கேட்டுள்ளார். (5464)

# மழை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர் முற்பணம் கோரல்

வன்னிப் பகுதியில் கடந்த மழை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் சிறிலங்கா அரசிடம் மூன்றுமாத முற்பணம் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த வருடம் பெய்து வந்த கடும் மழையினால் அரச ஊழியர்கள் தமது இருப்பிடங்களையும் வயல் நிலைங்களையும் இழந்துள்ளதாகவும் இவர்கள் மீள சுமுக வாழ்க்கையை நடாத்த இம் முற்பணத்தைக் கோருகின்றனர்.இவ்விடயத்தில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தி முற்பணம் வழங்க முன்வரவேண்டு மென ஒருமித்த கோரிக்கையை விடுக்கின்றனர்.(45)

# கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்கியோர் விபரம்

27.12.2004 தொடக்கம் 05.01.2005 வரை சுனாமி கடல் அனர்த்தத்தின் பொருட்டு நிறுவனங்களாலும், மக்களாலும் வழங்கப்பட்ட நன்கொடை விபரம் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| ஆ. ஜெயமணி (ரொறாண்டோ கனடா) | 100000,00 |
| தட்டுவன் கொட்டி கடற்தொழிலாளர் சங்கம், தட்டுவன்கொட்டி | 15000.00 |
| தேசிய எழுச்சிப் பேரவை (அக்கராயன்) —— | 39540.00 |
| வடபிராந்திய பாரஊர்தி சங்கம் பணியாளர்கள், கிளிநொச்சி | 17500.00 |
| M.E. ரேமன் (இல 76, கனகபுரம், கிளிநொச்சி) | 5000.00 |
| M.s. V. நல்லதம்பி (இல 10A,3/5, Ward place. Colombo-07 | 5000.00 |
| ந.கந்தசாமி நீர்பாசன காரியாலயம், கிளிநொச்சி | 5000.00 |
| சரஸ்வதி திருநகர், இல 28, கிளிநொச்சி. | 500.00 |
| செல்லையா-கருணாகரன் 103கதிரேசன் வீதி, கொழும்பு | 500.00 |
| தெ.சச்சிதானந்தகுரு கனகபுரம், கிளிநொச்சி. | 1000.00 |
| திருமதி திருச்செல்வம், மஞ்சுளாகுமாரி | 10000.00 |
| வே.விவேகானந்தன் ஜேர்மனி | 20000.00 |
| இ.பிரகாஸ் நித்தியா குடும்பத்தினர், 2ஆம் கட்டை, முரசுமோட்டை | 10000.00 |
| திரு.கு. மயில்வாகனம் No06, Miltonclose Hayse Middle Sex U.K | 500000.00 |
| A.D.O. மணியங்குளம், விநாயகர் குடியிருப்பு, ஸ்கந்தபுரம் | 660.00 |
| Pippa Mccowate, No 50 Alakender Street Manly Nsw Australiya | 20520.00 |
| போதகர் கிறிஸ் தமிழ்நாடு, இந்தியா | 100.00$ |
| க.செல்லத்துரை, பெரியதம்பனை | 5000.00 |
| ப.பத்மலதா பரவிப்பாஞ்சான் கிளிநொச்சி. | 12000.00 |
| எஸ்.யோகபண்டிதர் அவுஸ்திரேலியா | 2000.00 |
| தங்கராஜா கேமலதா 10/2கொலிங்வுட் பிளேஸ் கொழும்பு-06 | 25000.00 |
| வன்னி பொறியிலாளர் கம்பனி கனகபுரம் வீதி, கிளிநொச்சி | 100000.00 |
| திரு.நீ.துளசிதரன் 175 கண்டிவீதி, சாவகச்சேரி | 5000.00 |
| ஸ்ரீகந்தராசா கனகரத்தினம் உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் | 5000.00 |
| துரைராஜா முரளிதரன் ரொறாண்ரோ கனடா | 83000.00 |
| திரு.நா. சிவநாதன் இல 21C.T.C. பழையசோனகர்தெரு கொழும்பு-12 | 3000.00 |
| திரு. பேரின்பநாயகம் 35/2 இம்புலபிட்டி ஜனதய பவ்வாகம நாவலப்பிட்டி | 2000.00 |
| திரு. சி. சிறீஸ்காந்தராஜா 12SPrting Filed Road Eastham London E 624 | 60000.00 |
| திருமதி.பு.முருகுப்பிள்ளை இல122, கனகாம்பிகைக் குளம் கிளிநொச்சி. | 10000.00 |
| MR.Birrell Family Kent U.K. | f 250.00 |
| திரு.சுப்பிரமணியம் சபேசன் லண்டன் | 100000.00 |
| தட்டுவன்கொட்டி கிராம மக்கள், தட்டுவன்கொட்டி | 14665.00 |
| ஏ.கோபிதன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் | 10000.00 |
| திரு.பாலசுப்பிரமணியம் பாலநிகேதன் இல 225 உதயநகர் மேற்கு, கிளிநொச்சி | 1000.00 |
| MR.M.UthiyaKumar Vvanlenoop Street 1962 S.c HeemskerK Nederland | 40000.00 |
| பொன்னையா - கதிரேசு வின்சன்வீதி, இரணைமடு | 100000.00 |
| கொண்டகலை - லபுக்கலை, பொதுமக்கள், நுவரேலியா | 2000.00 |
| கதிர்காமநாதன் விஜேந்திரன், இராமநாதபுரம், கிளிநொச்சி. | 5000.00 |
| எஸ். நகேந்திரராசா, பிரான்ஸ் | 20000.00 |
| திரு.க.வைரமுத்து (பிரதிக்கல்வி பணிப்பாளர் கிளி) சிதம்பரகிரி, புளியம்பொக்கனை, பரந்தன் | 25000.00 |
| கந்தசாமி கேமா 1ஆம் கட்டை மானிப்பாய் வீதி உடுவில் சுன்னாகம் | 5000.00 |
| MR.Boyamingeh hnb Bank, M/2 2B Colombo-08 | 10000.00 |
| உருத்திரபுரம் கிழக்கு, மக்கள் | 7500.00 |
| எஸ்.சுரேஸ் Telecom யாழ்ப்பாணம் | 2000.00 |
| க.மயில்வாகனம் | 50000.00 |
| கு. மனோரதி | 50000.00 |
| அருணா குமாரதாஸ் டென்மார்க் | 50000.00 |
| வே.கு.ஏரம்பு | 10000.00 |
| அண்ணாமலை தேவராசா இல.23, சிலாபம் வீதி, கொச்சிக்கடை, நீர்கொழும்பு | 100000.00 |
| சிவா. கோபால், சமாதானச்செயலகம், கிளிநொச்சி. | 25000.00 |
| | 1689635.00 |

# கிழக்கு மாகாண மக்களுக்கு 2-ஆவது தடவையாக யாழ்.இலிருந்து உலர் உணவுப்பொருட்கள்

இயற்கைஅனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு உலர்உணவுப் பொருட்கள் இரண்டாவது தடவையாக நேற்று யாழ்.மாவட்டத்தில் இருந்து ஆறு பாரவூர்திகளில் எடுத்துச் செல்லப்பட்டன. இவ் உலர் உணவுப் பொருட்களை யாழ். மாவட்டபொதுஅமைப்புகள், யாழ். மாவட்ட தேசிய எழுச்சி பேரவை, இலங்கை விழிப்புணர்வற்றோர் சங்கம் என்பன இணைந்து வழங்கியிருந்தன யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளரும் தேசியஎழுச்சிப் பேரவையின் ஊடகப்பேச்சாளருமான கனகலிங்கம் தலைமையில் இவ் உலர் உணவுப் பொருட்கள் நேற்று மதியமளவில் எடுத்துச் செல்லப்பட்டன. (36)

## குளவி கொட்டியதில் இருவர் படுகாயம்


வட்டக்கச்சி நாவலர்வீதிப் பகுதியில் நேற்று 3.00 மணியளவில் குளவிகொட்டியதால் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரியவருகையில், நாவலர் வீதிப்பகுதியில் உள்ள தனது வயலுக்குப் பசளை இடச்சென்றவேளை கோபாலப்பிள்ளை-யோகேஸ்வரன (வயது-25) சுந்தரவடிவேல்-கமல்(வயது-14) என்பவர்களே குளவிகொட்டியதில் படுகாயமடைந்து அயலவர்களின் உதவியினால் வட்டக்கச்சி பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் இக்குளவிக் கூடு பெரிதாகக் காணப்படுவதால் அப்பகுதியில் பயணிப்பவர் மிகவும் கவனத்துடனேயே பயணம்செய்துவருவதும் குறிப்பிடத்தக்கது. (12)

-முல்லைத்தீவுப் பகுதியில் -

# 1964 இல் மூடப்பட்ட பாலம் கடற்கொந்தளிப்பில் வெளியே வந்தது

1964ஆம் ஆண்டு சூறாவளியினால் மூடப்பட்டிருந்த முல்லைத்தீவு வண்ணாங்குள கிராமத்தின் கடலுக்கு தண்ணீர் போகும் பாலம் கடந்த 26.12.2004 அன்று நடந்த கடல் அனர்த்தத்தினால் வெளியே வந்துள்ளது. இதனை சகல மக்களும் வெளிநாட்டிலிருந்து வருகை தருவோரும் பார்வையிடுவது குறிப்பிடத்தக்கது. இப்பாலம் இக்கிராமத்தின் தொடுவாயாக இருந்ததாக அப்பகுதியில் வசித்த முதியோர்கள் தெரிவித்தனர். (20)



நேற்று முன்தினம் இத்தாலிய நாட்டினால் வழங்கப்பட்ட மனிதாபிமான உதவிப் பொருட்கள் பாரஊர்தியிலிருந்து இறக்கப்படுவதை இத்தாலிய தூதரக அதிகாரியும் பொதுநிர்வாக மருத்துவ அதிகாரியும் நெறிப்படுத்துவதைப்படத்தில் காணலாம்.

# திருமலை ஈச்சிலம்பத்து பிரதேசத்தில் நோர்வே செஞ்சிலுவை வைத்தியசாலை

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அழைப்பை ஏற்று நோர்வே செஞ்சிலுவைச் சங்கம், திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஈச்சிலம்பத்துப் பிரதேசத்தில் மூன்று மாதங்களுக்கு வைத்திய சேவையை மேற்கொள்ள முன்வந்துள்ளது. தற்காலிக வைத்தியசாலையை நிறுவுவதற்கான வைத்திய உபகரணங்களுடன் 25 வைத்திய நிபுணர்கள், தாதிமார்கள்கொண்டநோர்வே செஞ்சிலுவைக் குழு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஈச்சிலம்பத்து கிராமத்துக்குச் சென்றது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலை மாவட்டக் கிளையின் தலைவர் டாக்டர் இ.ஜி. ஞானகுணாளன்,நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தின் வைத்தியக் குழுவை ஈச்சிலம்பத்து கிராமத்துக்கு அழைத்துச் சென்றார். எட்டு பாரவூர்திகளில் நோர்வேயிலிருந்து கொண்டு வரப்பட்ட வைத்திய உபகரணங்கள், மருந்துகள், மின்பிறப்பாக்கிகள் ஈச்சிலம்பத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. நோர்வே செஞ்சிலுவைச் சங்க வைத்தியக் குழுவில் சத்திர சிகிச்சை நிபுணர், மகப்பேற்று நிபுணர், உளவியல் சிகிச்சை நிபுணர், நீர்ச் சுகாதார பொறியிலாளர், வைத்திய நிபுணர்கள், குழந்தை நல சிகிச்சை நிபுணர் ஆகியோரும் அடங்குகின்றனர். தற்காலிக வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக் கூடமும் அமைக்கப்படுகின்றது.

ஈச்சிலம்பத்துப் பிரதேசம் மற்றும் வாகரை வரை நோர்வே செஞ் சிலுவைச் சங்கத்தின் வைத்திய சேவை விஸ்தரிக்கப்படும் என்றும் டாக்டர் ஞானகுணாளன் தெரிவித்தார். சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர வைத்திய சிகிச்சை வழங்குவதற்காகவே நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் இவ்வைத்தியக்குழுவை அனுப்பி வைத்துள்ளது. (25)

# மோட்டார் சைக்கிள்,சைக்கிள்களில் பக்கம் பக்கமாகச் செல்வதை தவிர்க்குக

-தமிழீழ காவல்துறையினர் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)


சுனாமி அனர்த்தம் காரணமாக எமது மக்கள் இடம்பெயர்ந்து பலர் கிளிநொச்சிப் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். இம் மக்களுக்கு உதவி செய்யும் நோக்குடன் தென் பகுதியில் இருந்தும், யாழ். மாவட்டத்திலிருந்தும் அரச,அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சுனாமி நடவடிக்கையில் பாதிக்கப்பட்ட மக்களின் உறவினர்களும் எமது பகுதிக்கு ஒவ்வொரு நாளும் பல வாகனங்களில் வந்து செல்கின்றனர். இதனை அறிந்து கொண்டும் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் யு-9 வீதியில் வீதிப்போக்கு வரத்திற்கு இடையூறாகப் பக்கம் பக்கமாகச் தங்கள் துவிச்சக்கர வண்டிகளையும், மோட்டார் சைக்கிள்களையும் ஓட்டுகின்றனர். அத்தோடு பக்கம் பக்கமாகச் சென்று கதைத்துக்கொண்டு செல்கின்றனர்.

நீங்கள் வீதியில் செல்லும் போது ஒருவருடன் கதைக்க வேண்டுமாயின் வீதிப்போக் குவரத்துக்கிடையூறு இல்லாத வகையில் ஒரு ஓரமாக நின்று கதைக்கவும். எமது அறிவுறுத் தல்களை மீறி நடக்கும் சகல மோட்டார் சைக்கிள், துவிச்சக் கரவண்டி ஓட்டுநனர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். என தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் தெரிவித்துள்ளார். (சோ)

-வட்டக்கச்சிப் பகுதியல்-

# கருவாடு போன்ற பொருட்கள் அதிகூடிய விலைக்கு விற்பனை

வட்டக்கச்சிப் ப்குதியில் உள்ள வியாபார நிலையங்களில் கருவாடு போன்ற கடலுணவுகளும் வேறு சில உணவுப் பொருட்களும் விலை உயர்வாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. தமிழீழ நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினரின் திடீர்சோதனையின் போது சுனாமி கடல் அனர்த்தத்தை அடிப்படையாகக்கொண்டு வட்டக்கச்சிப் பகுதியில் கடலுணவுகளான நெத்தலி 250 ரூபாய் தொடக்கம் 300 ரூபாய்வரையும், ரின்மீன் 85 ரூபாய் தொடக்கம் 90 ரூபாய் வரையும் விற்பனை செய்தனர். மா 30 ரூபாய் தொடக்கம் 35ரூபாய் வரையும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றதை அவதானித்தனர். இதனையடுத்து விலைக்கட்டுப் பாட்டுப் பகுதியினர் வியாபாரிகளை எச்சரித்து வருகின்றனர். எனவே இது தொடர்பான சந்தர்ப்பங்களில் மக்களை விழிப்பாக இருந்து பொருட்களைக் கொள்வனவு செய்யும் வண்ணம் தமிழீழ விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினர் கேட்டுள்ளனர். (12)





இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில். நிவாரணப் பொருட்களை சீர்படுத்தும் அமெரிக்க விமானப்படை விமானிகளையும், ஆஷே மாகாணத்திலுள்ள றுபன்பண்டா அவ்விமான நிலையத்திற்குக் காயமடைந்தவர்களைத் தூக்கிவரும் அமெரிக்கக் கடற்படை மருத்துவ சேவையாளர்களையும் படங்களில் காண்க.

# இந்தோனேசியா, சிறிலங்கா வழங்க வேண்டிய கடன் தொகையை நீக்க பிரிட்டன் உத்தேசம்

## நிபந்தனையடிப்படையில் நடவடிக்கை

(லண்டன்)

**சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளின் பழுவைக் குறைக்கும் திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாகப் பிரிட்டன் அறிவித்துள்ளது. இந்தத் திட்டத்திற்கு ஜி-8 அமைப்பிலுள்ள ஏனைய நாடுகளின் ஆதரவையும் திரட்டப் பிரிட்டன் முடிவு செய்துள்ளது.**

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள ஆசிய வலய நாடுகள் தமது தேசத்தை மீண்டும் கட்டியெழுப்புவதில் பொருளாதார ரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளன. சர்வதேச சமுகத்திடம் உடனடி உதவிக் கோரிக்கைகளை விடுத்துள்ளன.

இதற்கமைவாக நீண்ட கால பொருளாதார அபிவிருத்தியின் அங்கமாக இந் நாடுகளின் கடன் சுமையைக் குறைக்கும் திட்டமொன்று குறித்துப் பிரிட்டன் அறிவித்துள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு 98 பில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தோனேசியா செலுத்த வேண்டியுள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இது 57 வீதமாகும்.

சிறிலங்காவைப் பொறுத்தவரை 9.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்குச் சிறிலங்கா செலுத்தவேண்டியுள்ளது. இந்தக் கடன்களுக்கு வருடாந்தம் 3 பில்லியன் அமெரிக்க டொலர்களை வட்டியாகச் செலுத்த வேண்டியுள்ளது

பிரிட்டன் புதிய திட்டத்தின்படி இந்தக் கடன்தொகை இரத்துச் செய்யப்படுகின்றது. இந்தத் தொகையை நாட்டின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இரு நாடுகளும் செலவிட வேண்டும் எனப் பிரிட்டன் தெரிவித்துள்ளது.

பிரிட்டனின் இந்தத் திட்டத்தையடுத்து உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவையும் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## வேலை நிறுத்தம்

(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டில் வருகிற 19ஆம் திகதி வேலை நிறுத்தம் நடத்தப்போவதாக ரயில்வே தொழிற்சங்கம் அறிவித்துள்ளது. ரெயில்வே துறையில் ஆட்குறைப்பைக் கண்டித்து இந்தப் போராட்டம் நடைபெறுகிறது.



ஈராக் மொசூலில் துருக்கி எரிபொருள் வண்டி தாக்கப்பட்டபின் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

# சுனாமி எச்சரிக்கைக் கருவிகளை இலவசமாக வழங்கத் தயார்

## இஸ்ரேல் நிறுவனம் அறிவிப்பு

(டெல்அவில்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு சுனாமி எச்சரிக்கைக் கருவிகளை இலவசமாக வழங்கத் தயார் என்று, இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த ஆவ்திபஸ் பேடண்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனத்தின் மூத்த அதிகாரி ஜெடேலிஸ் கூறியதாவது; கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி காலை சுமாத்திராத் தீவில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியையும், அதைத் தொடர்ந்து சுனாமி உருவானதையும் அமெரிக்கா முதல் கண்டு பிடித்தது. ஆனால் ஆசிய நாடுகளுக்கு இது போன்ற தகவலைக் கொடுக்க வேண்டும் என்ற அதிகாரபூர்வ நடைமுறைகள் எதுவும் இல்லாததால், தகவல் பரிமாற்றம் நடைபெறவில்லை.

பொதுவாக பசுபிக் கடலில் தான் சுனாமிகள் உருவாகும். இந்தியப் பெருங்கடலில் சுனாமி உருவானது மிக அபூர்வமான செயல். சுமாத்திராத்தீவில்உருவான சுனாமி 75 நிமிடங்களுக்குப் பிறகுதான் தாய்லாந்தைத் தாக்கி இருக்கிறது. அதன்பின் இலங்கை, இந்தியா, அந்தமான்தீவுகளைத் தாக்கி இருக்கிறது.

சுனாமி பற்றிச் சரியான தகவல் பரிமாற்றம் நடந்திருந்தால் பேரழிவைத் தடுத்திருக்கலாம். சுனாமி கண்டுபிடிப்புக் கருவிகளை எங்கள் நிறுவனம் சேவை மனப்பான்மையுடன் தயாரித்து வருகிறது. இதைச் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏழை நாடுகளுக்கு இலவசமாக வழங்கத் தயாராக இருக்கிறோம். இதை நீரிலும், நிலத்திலும் பயன்படுத்தலாம். இது மிகச் சிறியதாகத் தான் இருக்கும். இதன் விலை குறைவுதான். இந்தக் கருவி அலையின் வேகம் என்ன? எந்த திசையில் வருகிறது? பூமி அதிர்ந்தால் அதன் அளவு என்ன? என்பது போன்ற தகவலைத் தெரிவிக்கும். இதை உலகின் எந்த மூலையிலும் பயன்படுத்தலாம். செயற்கைக் கோளுடன் இணைக்கப்பட்ட ரெலிபோன் தொடர்பும் இதில் உண்டு. இவ்வாறு இஸ்ரேல் நிறுவன அதிகாரி கூறினார்.

# சீன மலைப் பகுதியில் விபத்து

## 54 பேர் பலி; 41 பேர் படுகாயம்

(பெய்ஜிங்)

சீனாவில் திபெத் பகுதியில் இருக்கும் குலா மலைப்பகுதியில் பக்தர்களை ஏற்றிக்கொண்டு சென்ற பாரஊர்தி எதிர்பாராத விதமாகக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 50 பேர் பலியானார்கள்.

மேலும் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் 4 பேர் இறந்தனர்.

மேலும் 41 பேருக்குப் பலத்த காயம் ஏற்பட்டது. சீரானசாலை வசதி இல்லாததே விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

சீனாவில் சாலை விபத்துக்களில் நாள்தோறும் 600 பேர் பலியாகிறார்கள் என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.



பெருநாட்டின் லிப இராணுவ விமானநிலையத்தில் இருந்து கிளர்ச்சிவாதிகளின் தலைவர் அன்ரோறோ குமாலா இரு தேசியப் பொலிசாரினால் கைகட்டிய வண்ணம் கொண்டு செல்லப்படுகின்றார். கிளர்ச்சியில் ஈடுபட்ட இவரும் இவரின் ஆதரவாளர்களும் அதனைக் கைவிட்டு சரணடைந்தமை தெரிந்ததே.

# பாக்தாத்தில் தீவிரவாதிகள் தாக்குதல்

## ஆளுநரும் ஆறு படையினரும் பலி!

பாக்தாத் மாநில ஆளுநர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தில் அவருடைய மெய்ப்பாதுகாவலர்கள் 6 பேரும் பலியாகினர்.

பாக்தாத் மாநில ஆளுநராக இருந்தவர் அலி-அல்-ஹெதாரி இவர் பாக்தாத் புறநகர்ப் பகுதியில் இருக்கும் அல்ஜமா என்ற இடத்தில் தங்கியிருந்தார். நேற்று முன்தினம் காலையில் அவர் காரில் பாக்தாத்துக்கு புறப்பட்டுச் சென்றவேளை ஹீரியாக் என்ற இடத்தில் அவர் வந்தபோது துப்பாக்கிதாரிகள் சரமாரியாகச் சுட்டார்கள். ஆளுநரின் கார் துப்பாக்கிக் குண்டுகளால் சல்லடையாக்கப்பட்டது. இதில் அலி-அல்-ஹெதாரி சம்பவ இடத்திலேயே இறந்தார். அவருக்குப் பாதுகாப்பாக வந்த 6 வீரர்களும் பலியானார்கள். இந்தத் தாக்குதல்சம்பவம் பற்றி ஆளுநரில் தலைமைப் பாதுகாப்பு அதிகாரி கூறுகையில்;"ஆளுநர் கவச காரில் வந்தார். நாங்கள் மேலும் 2 கார்களில் வந்தோம்.ஹீரியாக் பகுதியில் வந்து கொண்டிருந்த போது நாலாபுறங்களில் இருந்தும் எங்களை நோக்கிச் சுட்டார்கள் என்று தெரிவித்தார்.

ஆளுநர் ஹெதாரியைக் கடந்த செப்ரெம்பர் மாதம் கொலை செய்ய முயற்சி நடந்தது. அப்போது அங்கேயே பாதுகாப்புப் படை வீரர்கள் 2 பேர் இறந்தார்கள். ஹெதாரி அந்தத் தாக்குதலில் தப்பினார். இப்போது 2-ஆவது முறையாக நடந்த இந்தத் தாக்குதலில் அவர் உயிரிழந்துவிட்டார். இதற்கு முன்பு நிர்வாக சபைத் தலைவராக இருந்த இஷாதீன் சலீம் என்பவரும் கடந்த மே மாதம் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈராக் இடைக்கால அரசாங்கத்தில் உயர் பதவி வகிப்போர்கள் மீது தொடர் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடி வரும் தீவிரவாதிகளே இந்தத் தாக்குதலை நடத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து தமிழ்ச்செல்வனிடம் பிரஸ்கர் கவலை தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

**சிறிலங்காவிற்கான நோர்வேத் தூதுவர் கான்ஸ் பிரஸ்கர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து தமது மிகுந்த கவலையைத் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் சமாதானச் செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் தனது கவலையைத் தெரிவித்துள்ளார்.

தனது கிளிநொச்சி விஜயம் குறித்து கருத்துத் தெரிவித்த நோர்வேத்தூதுவர் நாம் தமிழ்ச் செல்வனுடன் உரையாடினோம் சுனாமி தாக்குதலின் பின்னரான எமது இரண்டாவது வருகையாகும் இது. 26ஆம் திகதிய அனர்த்தம் தொடர்பாக மிகுந்த கவலையைத் தெரிவித்தோம். நாட்டிலுள்ள சமூகங்கள் ஒரு போதும் சந்திக்காத அனுபவத்தை தற்போது அடைந்திருக்கின்றன. எமது நோர்வே அரசு சிறிலங்கா மக்களுக்கு உதவ முன்வந்திருக்கிறது. எவ்வாறாயினும் நாம் இதுபற்றி மிகவும் கவலை கொள்கின்றோம். அதேபோன்று சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் கவனம் எடுத்து வருகிறோம். தற்போது பாதிப்புற்றோருக்கான உடனடி உதவிகள் நடைபெறுகின்றன. கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற சந்திப்பின் போது உதவிகள் பற்றி தீர்மானிக்கப்பட்டது. எமது நாடு 170 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கென வழங்கும் போது அது குறுகிய காலத்துக்காக.



முள்ளியவளை அவசரகால செயலணிக் குழுவுடன் கலந்துரையாடும் யுனிசெப் பிரதிநிதி கரோல்பெலமி



முல்லை நகர்ப்பகுதியில் சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்றும் நோக்கில் புலிகளின் சுகாதார சேவையினரால் மருந்து தெளிக்கப்படுகின்றது.

தற்போது இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ளவர்களை மீட்கும் பணியும் மீளக்குடியமர்த்தும் பணிகளும் எடுக்க வேண்டியது பிரதானமான அவசரமான படியால் அவைகள் நிறைவேற்றப்பட்டு மக்கள் இயல்பு நிலைக்கு வந்த பின்னரேயே சமாதான முயற்சிகள் பற்றிக் கூற முடியும். ஆயினும் இரு பகுதியினரும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பேச்சுவார்த்தைக்குச் செல்வது பொருத்தமானதாகும் என நான் நினைக்கின்றேன். அத்துடன் இந்த நிவாரணப் பணிகளில் அரசும் புலிகளும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு நிவாரணப் பணிகளை மேற்கொண்டால் அது பேச்சுவார்த்தை மேசைக்கான நல்ல வாய்ப்பாக இருக்கும். பேச்சுமேசைக்குப் போவது பற்றி நாம் இன்னும் சிறிலங்கா அரசுடன் பேசவில்லை. இந்த மீட்புப் பணிகள் நிவாரணப்பணிகள் முடிந்ததும் இதுபற்றி உடனடியாக கலந்துரையாடி இருபகுதியினருக்கும் இடையில் ஒரு ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளலாம் என்று நினைக்கிறோம். அதன் மூலமாக பல பேச்சுக்களை நடத்தலாம் என்று நினைக்கிறேன் என்றார்.

## மின் விளக்கு பொருத்த மக்கள் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி டிப்போச் சந்தியில் இரவு வேளையில் மின் விளக்கு இல்லாத காரணத்தால் விபத்துக்கள் ஏற்பட ஏதுவாக இருக்கின்றது.

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் முக்கியமான ஒரு சந்தியாக டிப்போச் சந்தி உள்ளது. இரத்தினபுரத்திற்கும் கனகபுரத்திற்கும் செல்லும் வீதிகள் ஏ-9 வீதியில் சந்திக்கும் பிரதான சந்தியாகும்.இவ் இடத்தில் இரவு வேளையில் வருகின்ற வாகனங்கள், உந்துருளிகள், துவிச்சக்கர வண்டிகள் என்பன முக்கிய சந்திக்கு அப்பாலுள்ள மின் விளக்குகளின் இடத்தை நோக்கித் திரும்புவதனால் முக்கிய சந்தியில் நான்கு பக்க மும் பயணிக்கும் மக்கள் விபத்துக்குள்ளாகும் நிலை ஏற்படுகின்றது. எனவே இவ்டிப்போச் சந்தியில் ஒரு மின்விளக்கை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொருத்த வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். (கு)

– சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான –

## நிவாரண விநியோகம் குறித்து திருமலை செயலகத்தில் கூட்டம்

(திருகோணமலை)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை சிறப்பான முறையில் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று திருகோணமலை அரசாங்க அதிபர் பணிமனையில் கடந்த திங்கட் கிழமை நடைபெற்றுள்ளது.

இக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன், வெளிநாட்டு நிவாரண அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச அதிபர்கள், சிறிலங்காப் படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புப் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மீட்புப் பணியாளர்கள் எந்தெந்த இடங்களுக்கு அனுப்பப்பட வேண்டும். நிவாரணத் திட்டத்தை அமுல்ப் படுத்தும் முறை என்பன குறித்தும் இதன் போது ஆராயப்பட்டுள்ளன.



நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களை வேறு இடங்களில் தங்க வைப்பதற்காக தயாரிக்கப்பட்ட தற்காலிகக் கொட்டகை (படம்-கலாவரன்)

## காணவில்லை



(அலுவலக செய்தியாளர்) கிளிநொச்சி மலையாளபுரத்தைச் சேர்ந்த சிறிசேன யோகேஸ்வரன் என்பவர் கடந்த 25.12.2004 அன்று முல்லைத் தீவிற்கென சென்றவர் இதுவரையிலும் வீடு திரும்பவில்லை. இவர் குறித்த தகவல் தெரிந்தவர்கள் சிறிசேனலலிதா சுபாஸ் கட்டடம் மலையாளபுரம், கிளிநொச்சி என்னும் முகவரிக்குத் தெரிவிக்கும் வண்ணம் இவரின் துணைவியார் வேண்டியுள்ளார். (சோ)

* * * * * * * * * * * * * *



ஜெயக்குமார் நிரோஜன் என்பவர் (வயது-19) 20.12.2004 அன்று முல்லைத்தீவுக்கு தொழிலுக்காகச் சென்றார். இவர் இதுவரையும் வீடு வந்து சேரவில்லை. இவரை அ.மாகிறெட் குடும்பத்தினரும், சித்தப்பா ஜேசுபாலன் என்பவரும் தேடுகிறார்கள். இவர் எங்கிருந்தாலும் இவரைக் காண்பவர்கள் புலிகளின் குரல் ஊடாகவோ, காவல்துறை யினர் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ தொடர்புகொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி டோ.ஜேசுபாலன், அ.அல்பிறட்,அ.றஞ்சன் (உதயகுமார்), ஊறணி குடியேற்றம், வல்வெட்டித்துறை.

## இரண்டு கிலோ மாபெற 246 ரூபா தேவை!

(அலுவலக செய்தியாளர்)

மக்களின் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மா மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றது இந்நிலையில் கிளிநொச்சியில் 2 கிலோ மாவாங்குவதற்கு 246 ரூபா தே வைப்படுகின்றது.

கிளிநொச்சிப் பொதுச் சந்தையில் அமைந்துள்ள கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மக்கள் கடையில் மாவைப் பெறு வதற்கு 200ரூபா பெறுமதியான வேறு பொருட்களைப் பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு 200 ரூபாவிற்கு வேறு பொருட்களைப் பெறாத மக்கள் குறிப்பிட்ட கடையிலிருந்து மாவினைப் பெறமுடியாது.

அன்றாடம் உழைத்துத் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து வரும் மக்கள் 200 ரூபாவிற்கு வேறு பொருட்களைப் பெற்று பின் மாவினைப் பெறுவது என்பது மிகவும் கடினமான விடயம் எனினும் மக்கள் தமக்குத் தேவைப்படும் ஒரு கிலோ அல்லது இரண்டு கிலோ மாவினைப் பெறுவதற்கு 200 ரூபாவை மேலதிகமாக வைத்துக் கொண்டே பெறவேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகியுள்ளனர். (கு)

## சுனாமி பேரலையால் அம்பாறையில் 12883 பேர் உயிரிழப்பு

(அம்பாறை)

சுனாமி பேரலையின் தாக்கத்திற்குள்ளாகி அம்பாறை மாவட்டத்தில் 12883 பேர் உயிரிழந்துள்ளனர்.

அங்குள்ள 92 முகாம்களில் 53122 பேர் தங்கியுள்ளார்கள் என்றும் இம்மாவட்டத்தில் மொத்தச் சனத்தொகை 287940 ஆக இருக்கையில் காணாமல் போனோர் தொகை 2643 ஆகவுள்ளது. இதேவேளை உறவினர்களின் வீடுகளில் 76457 பேர் தங்கியுள்ளார்கள் மேலும் இம் மாவட்டத்தில் 26141 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பேரலையின் தாக்கத்திற்குள்ளாகி 684 பேர் காயமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## வட்டக்கச்சியில் வீதி விபத்து ஈருருளியில் பயணித்தவர்காயம்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி புளியம் பொக்கணை வீதியில் உந்துருளி ஈருருளி விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இச் சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் பெரிய குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதிவேகமாகப் பயணித்த உந்துருளி ஈருருளியில் பயணித்த வயோதிபரான பரமானந்தம் சிவக்கொழுந்து (வயது 64) என்பவர் மீது மோதியதில் அந்த நபர் படுகாயமடைந்துள்ளார் (15)

# தமிழ் மக்களுக்கான நிவாரண உதவிகளை சர்வதேச சமூகம் புலிகளுக்கூடாக வழங்கவேண்டும்

## யாழ்.குடாநாட்டு கல்வியியலாளர்கள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**இலங்கையில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ரஷ்யா, இந்தியா,நோர்வே, பிரிட்டன் உட்பட சர்வதேச நாடுகள் பலவற்றாலும் வழங்கப்படும் மனித நேய உதவிகள் வடபகுதி வாழ் தமிழ்மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுமா என யாழ். குடாநாட்டு அரசியலாளர்களும், கல்வியியலாளர்களும், சமூக அவதானிகளும் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.**

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த அழிவுகள் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட இலங்கையின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, மனிதாபிமான தேவைகளைப் பூர்த்தி செய்ய சர்வதேச நாடுகள் பலவற்றாலும் பல கோடிக்கணக்கான பெறுமதியுள்ள உதவிகள் வழங்கப்பட்டன.

எனினும் அவையாவும் அரசின் மோசடி நடவடிக்கைகள் மூலமும் இனவஞ்சக நடவடிக்கைகள் மூலமும் முற்றுமுழுதாக சிங்களப் பிரதேசங்களுக்கே அரசு பகிர்ந்தளித்ததே தவிர எந்தஒரு உதவிகளையும் வடபகுதி தமிழ் மக்கள் பயன்பெறுமளவிற்கு பகிர்ந்தளிக்கவில்லை.

எனவே இவ்வாறான கடந்தகால அனுபவங்களைச் சுட்டிக்காட்டியே மேற்கண்டவாறு சந்தேகம் எழுப்பியுள்ள அவர்கள்,

சர்வதேச நாடுகள் தமிழ்மக்களுக்கு மனிதநேய உதவிகளை வழங்க விரும்பின் அவற்றை விடுதலைப் புலிகளூடாகவே வழங்கப்படவேண்டும் எனவும் கோரியுள்ளார். (33)

## மீட்புப் பணிக்கு உதவி

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் மீட்புப்பணி செய்வதற்காக நேற்று முன்தினம் மன்னாரில் இருந்து பெருந்தொகையான மீட்புப் பணியாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (18)

*–சுனாமியால் பாதிப்புற்ற கிராமமொன்றை–*

# நெதர்லாந்து தேவாலயம் புனரமைக்க ஒப்புதல்

(வடமராட்சி)

'சுனாமி' கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட வடமராட்சியின் கரையோரக் கிராமங்களில் ஒன்றினை மீள நிர்மாணித்து வழங்க நெதர்லாந்து நாட்டு தேவாலயமொன்று முன்வந்துள்ளது.

யாழ்.மாவட்ட அரிமா கழகம் ஊடாக இப்பணிகளை முன்னெடுக்க முடிவு செய்துள்ள அவ்வமைப்பின் பிரதிநிதிகள் அடுத்தமாத முற்பகுதியில் இங்கு வருகைதரவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (27)

# மீன்பிடி உபகரணங்கள் மீட்பு

வடமராட்சி வடக்கு கரையோரப்பகுதிகளில் சுனாமி அனர்த்தத்தினால் சிக்கிய மீன்பிடி உபகரணங்கள் இடிபாடுகளுக்குள் இருந்து மீட்கப்பட்டு வருகின்றன.

இடிபாடுகளுக்குள் விலையுயர்ந்த மீன்பிடி உபகரணங்கள் சிக்கியிருந்தன.

இடம்பெயர்ந்த மீனவர்கள் அப்பகுதிகளுக்குள் சென்று தமது தொழிற் பொருட்கள் மற்றும் வீட்டுப்பொருட்களை இடிபாடுகளுக்குள் இருந்து மீட்டு வருகின்றனர். (45)

# படைமுகாம்களிலுள்ள கட்டாக்காலி நாய்களை அழிக்க படையினர் ஒத்துழைப்பதில்லை!

## -தென்மராட்சி பிரதேச சபைக்கும் நெருக்கடி

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் பெருகியுள்ள பெருந்தொகையான கட்டாக்காலி நாய்களை பிடித்தழிப்பதில் தென்மராட்சிப் பிரதேச சபை ஆளணி மற்றும் வாகனப் பற்றாக் குறையால் பெரும் அவதியுறுவதாகத் தெரியவருகிறது.

கடந்தபல மாதங்களாக பொது மக்களுக்கு பாரிய அளவில் சிரமத்தை ஏற்படுத்தி வரும் கட்டாக்காலி நாய்களால் பொது மக்கள் பாதிக்கப்படுவதுடன், காலை வேளைகளிலும் மாலை நேரங்களிலும் பிரதானசாலையில் உலாவித்திரியும் பெருந்தொகையான நாய்களால் வீதிவிபத்துக்கள் ஏற்படுவதுடன், சுகாதார சீர்கேடும் ஏற்படுவதாகத் தெரியவருகிறது.

தென்மராட்சி பிரதேச சபைக்கு நாய்பிடிப்பதில் பயிற்றப்பட்ட தொழிலாளர்களும் அதற்கான வாகன வசதியும் இன்மையால் எழுதுமட்டுவாள் தொடங்கி நாவற்குழி வரையான பகுதிவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் நடமாடுவதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர். இதில் பெருந்தொகையான நாய்கள் சிறிலங்காப் படைமுகாம்களிலேயே தங்கியுள்ளதாகவும், இது குறித்து படையினரின் சுகாதாரப் பிரிவுக்கு போதியளவு விளக்கம் கொடுத்தும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லையென தெரியவருகிறது(28)

# சுனாமியால் பாதிப்புற்ற படை நிலைகளைப் பலப்படுத்த பெருமளவு பனை,தென்னை மரங்கள் படையினரால் தறிப்பு

## –நள்ளிரவுக்குப் பின் அகற்றப்படுகின்றன

(தென்மராட்சி)

யாழ்.குடாநாட்டில் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டுள்ள சிறிலங்காப்படைகளின் முன் அரண்களையும் படைமுகாம்களையும் பலப்படுத்த பெருந் தொகையான பனை தென்னை மரங்கள் தறிக்கப்பட்டு வருவதாக இப்பிரசேத மக்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாக சிறிலங்காப்படைகளால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பொது மக்களின் காணிகளில் இருந்தே இந்த மரங்கள் தறிக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை தொடக்கம் கனரக வாகனங்கள் மற்றும் நீளமான கன்ரர்களில் இரவு ஒரு மணிக்கு மேல் இப்பகுதிகளில் இருந்து யாழ் குடாநாட்டின் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுவதாக நம்பகமாக தெரிய வருகிறது.

எழுதுமட்டுவாள், ஓட்டுவெளி, கரம்பகம், மருதங்குளம் முதலான பகுதிகளில் இருந்தே இந்த மரங்கள் தறிக்கப்பட்டு, இப்பிரதேச மக்களுக்கு தெரியாத வண்ணம் இரவு வேளைகளில் படையினர் கொண்டு செல்வதாகவும் இதைக் கடந்த மூன்று நாட்களாக அவதானித்துள்ள பொது மக்கள் இத்த கவலை தெரிவித்துள்ளனர்.(28)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் நலன்புரி நிலையங்கள் இடமாற்றம்

(வடமராட்சி)

சுனாமி கடற்கொந்தளிப்பால் இடம்பெயர்ந்து வடமராட்சி பகுதியில் 30 நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களை ஒன்றிணைத்தும் உதவி, வசதி வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்கும் நோக்கோடு உடனடி மனிதாபிமான புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றில் தொண்டமனாற்று பகுதியில் இருந்து கற்கோவளப் பகுதிக்குட்பட்ட மக்கள் வாழும் நலன்புரி நிலையங்களை தற்காலிகமாக தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம், கெருடாவில் வித்தியாலயம், வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, வல்வை மகளிர் கல்லூரி, பொலி கண்டி பாலாவி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, அல்வாய் வடக்கு சிறிலங்கா வித்தியாலயம், மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலயம், வட இந்து மகளிர் கல்லூரி வேலாயுதம் மகா வித்தியாலயம் அந்தோனியார் லூத்துமாதா கோவில், கற்கோவள மெதடிஸ்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலைகளிலும்,

வலிகாமம் வடக்கிலிருந்து தற்போது சுனாமி கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டோரை திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயத்திலும், தம்பசிட்டி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும்மேற்படி 30 நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களை ஒழுங்குபடுத்தி அமர்த்தும் பணியில் நேற்று முன்தினம் முதல் ஈடுபட்டுள்ளனர். இம் மக்களுக்கான உதவிப் பணிகளை அந்தந்த கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரும் அப்பகுதி கிராம சேவகர்களும், தொண்டர் நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின்றதோடு இம் மக்களுக்கான சுகாதார தேவைகள் குடி தண்ணீர் வசதிகளும் மிகக்கவனமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (கா)

# 10 ஈழத்தமிழ் அகதிகள் தாயகம் வருகை

(மன்னார்)

தமிழகம் கருவூர் மாவட்ட நாயனார் அகதி முகாம் சேலம் மாவட்டத்தில் செந்தாரப்பிட்டி அகதி முகாம் என்பவற்றில் வசித்த 10 இலங்கை தமிழ் அகதிகள் இராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்டு கடந்த திங்களன்று தலைமன்னார் வந்தடைந்தனர்.

இவர்களை நேற்று முன்தினம் தலைமன்னார் பொலிசார் மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். மன்னார் நீதிபதி எல்.எம். அப்துல்லா அவர்களை தங்கள் சொந்த இடமான வவுனியா கணேசபுரம், மன்னார், பேசாலை, உடுத்துறை தாளையடி ஆகிய இடங்களிற்கு அனுப்பி வைக்க உத்தரவிட்டார். (18)

# கருவாட்டுக்குத் தட்டுப்பாடு

வவுனியாவில் கருவாட்டுக்கு அதிகளவான தட்டுப்பாடு நிலவுகிறது. அண்மையில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பு காரணமாக தற்போது மக்கள் கடலுணவுகளை உண்பதைத் தவிர்த்து வருகின்றனர். இதன் காரணத்தினால் வவுனியாவில் கருவாட்டுக்கு பாரிய கேள்வி ஏற்பட்டுள்ளது தற்போது வவுனியாவில் வாழ்ந்து வரும் மக்கள் கருவாட்டினைக் கொள்வனவு செய்வதில் அதிகளவு ஆர்வம் காட்டியும் வருகின்றனர்

இதேவேளை இவ் அனர்த்தத்தையடுத்து வடக்கு கிழக்கு பகுதிகளில் கடலுணவுக்கு தமிழீழ சுகாதாரப் பிரிவினரால் தடைவிதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆளுநர் வருகை

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் திரோன் பெர்னாண்டோ இன்று வவுனியாவுக்கு வரவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வவுனியாவின் நிலைமைகள் தொடர்பாகவும் வவுனியாவின் ஊடாக முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு மேற்கொள் ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகள் தொடர்பாகவும் ஆராய இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பாதிப்புற்றோருக்கு நிவாரணம் வழங்கல்

## வவுனியா ப.நோ.கூ. சங்கமும் உதவி

கடற் கொந்தளிப்பால் வடக்கு கிழக்கு பகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு 34 பார ஊர்திகளில் நிவாரணப் பொருட்களை அனுப்பியிருப்பதாக வவுனியா தமிழர் புனர்வாழ்வு கிளையினர் தெரிவித்துள்ளார்கள்.

தொடர்ந்தும் வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிவாரணப் பொருட்களை சேகரித்து வருகின்றது. இதுவரை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு-09 பாரஊர்திகளும், அம்பாறை மாவட்டத்திற்கு-09 பாரஊர்திகளும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு-08 பாரஊர்திகளும், திருகோணமலை மாவட்டத்திற்கு-04 பாரஊர்திகளும், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு-03 பாரஊர்திகளும், யாழ்ப்பாண மாவட்டத்திற்கு-01 பாரஊர்தியும் அனுப்பப்பட்டுள்ளன.

இதேவேளை, வவுனியா பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளாகியுள்ளவர்களுக்கு வவுனியாவில் இருந்து சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கிடுகுகள் அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

வவுனியா பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் குமாரகுலசிங்கம் இதனைத் தெரிவித்துள்ளார். ஏற்கனவே வவுனியா பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினால் ஒரு இலட்சம் ரூபா பணமாக நிவாரண நிதி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டதும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான அரிசியினை நிவாரணத்திற்காக வழங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஒரே கொள்கையைக் கொண்டிராத ஆளும் கட்சிகள் நிவாரணப் பணியை சீராக மேற்கொள்வது எப்படி

அண்மையில் நாட்டின் கரையோரப் பகுதிகளை துவம்சம் செய்த சுனாமி அலை பல உயிர்களைப் பலி எடுத்தும் பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்தழிவுகளை ஏற்படுத்தியும் உள்ளதுடன் நின்று விடவில்லை. இந்நாட்டின் அரசியலையும் முற்றிலும் புதுப்பிக்கும் ஒரு இயற்கையான வாய்ப்பையும் ஏற்படுத்தி விட்டது.


மகிந்த ராஜபக்ஷ

அழிவுற்ற பகுதிகளை மீளக்கட்டியெழுப்பவும் 25 தேர்தல் மாவட்டங்களில் 9 மாவட்டங்களை மீளமைப்புச் செய்யவுமான பூதாகரமான பணி ஒன்று அவர்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. அது அனைத்து அரசியல் வாதிகளுக்கும் மனவுளைச்சலை ஏற்படுத்தும் என்பதும் கூறத் தேவையில்லை.

ஏறத்தாழ 30 ஆயிரம் பேர் பலியாகியும் வேறு பல்லாயிரம் பேர் காயமடைந்தும் பல இலட்சம் பேர் வீடிழந்தும் உள்ள நிலையில் அதிலிருந்து மீட்சி பெற பல மாதங்களோ, வருடங்களோ எடுக்கும் நிலையில் அனைத்து சமூகங்களும; அரசியல் வாதிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய காலம் இதுவாகும்.

இந்த அனர்த்தங்களில் இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கான நிவாரண உதவிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து குவியும் என்பதில் ஐயமில்லை என்றாலும் ஐ.நா செயலாளரும். அமெரிக்காவின் கொலின் பவலும் கூறியதற்கிணங்க அவற்றை முழுமையாக விநியோகிக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசு எவ்விதமான வழியைக் கைக்கொள்ளப்போகின்றது. என்பது பாரிய பிரச்சினையாகும்.

சிறிலங்கா ஏற்கனவே பொருளாதார ரீதியாக தடுமாற்றத்தைக் கண்டுவரும் நிலையில் அரசியலமைப்பை மாற்ற சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தும் நோக்கத்தோடு வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு முடிவடைந்துள்ளது. அதேவேளை இந்த அழிவுகளில் இருந்து அரசாங்கம் மீட்சி பெறுவது எப்படி என்பதைத் கூறத் தேவையில்லை.

வரவு செலவுத் திட்ட யோசனைகளும் மக்களுக்கு எதுவித முன்னேற்றகரமான முறையில் இல்லை என்று சலிப்புற்று ஓரளவு தனது அன்றாடப் பணிகளைச் செய்து வரும் நிலையில் இப் பேரழிவு ஏற்பட்டுள்ளது. காரணம் இது கரையோர மக்களை மட்டுமன்றி முழு நாட்டையும் ஒரு உலுக்கு உலுக்கி விட்டிருப்பது என்பதே தற்போது உண்மையாகும்.

மேலும் சந்திரிகா அரசிற்குள் அங்கம் வகிக்கும் பிரதான கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி என்பன தமக்குள் ஒரு வரையறுக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையைக் கொண்டிராத நிலையில் சில திட்டங்களுக்கு வழங்கப்பட்ட உதவிகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பதிலும் ஏற்கனவே அரசாங்கத்துள் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

இவ்வாறான சந்தர்ப்பத்திலேயே தற்போது சுனாமி அலை நாட்டை தாக்கியிருப்பதுடன் வெளிநாடுகளின் பார்வையையும் மீண்டும் எம் நாட்டு அரசியல் வாதிகள் பக்கம் திசை திருப்பியிருக்கின்றது. இதன் போது நாட்டுக்கு ஏற்ப, அதாவது அழிவுகளுக்குள்ளான மக்களுக்கேற்ப அரசியல் வாதிகள் நடந்து கொள்கின்றார்களா? அல்லது தமது அரசியல் நலனைக் கருத்திற் கொண்டு செயற்படுகின்றார்களா என்பதை அறிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் நாட்டின் அதிபர் என்ற வகையில் சந்திரிகா எடுக்கும் நடவடிக்கை என்ன என்பது பற்றியே கவனம் திரும்புகின்றது. சனாதிபதியாக மக்கள் வாக்களித்து பதவியிலிருத்தியிருக்கும் போது அவர் எடுக்கும் அல்லது எண்ணியிருக்கும் நடவடிக்கைகளுக்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவும் கூடும். ஆயினும் அண்மையில் சனாதிபதி வெளியிட்டுள்ள கருத்து நம்பிக்கையளிப்பதாக இல்லை. கடந்த வெள்ளியன்று அவர் உரையாற்றும் போது நாட்டின் தற்போதைய அவல நிலைக்கு முக்கியத்துவம் அளித்துப் பேசவில்லை. எதிர்க்கட்சியும் நிவாரணப் பணிகளில் ஆளும் கட்சியினர் தகுந்த நடவடிக்கைகளை உடனேயே எடுக்கவில்லை என்று குற்றஞ் சாட்டியுள்ளது.


விமல்வீரவன்ச

சந்திரிகாவைப் பொறுத்தளவில் அவரின் நிறைவேற்று அதிகார ஒழிப்புத் திட்டமும் டிசம்பர் 26 ஆம் திகதி சுனாமி அலையினால் அடித்துச் செல்லப் பட்டதாகவே கருதுகிறார்.

இதனிடையே சுனாமி தாக்கம் சந்திரிகாவின் தனிப்பட்ட அரசியல் வியூகத்தையும் உலுக்கி விட்டுள்ளது. அதாவது நிறைவேற்று சனாதிபதி முறையை ஏப்ரலில் நீக்கி விட அவர் எண்ணியிருந்தார். உண்மையில் அவரின் இரண்டாவது பதவிப் பிரமாணப்படி 2005 இல் அவரது பதவிக் காலம் முடிவடைகிறது. இந்த நிலையில் அவர் சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதானால் 700 மில்லியன் ரூபாய் தேவைப்படும். தற்போது அது இடம் பெயர்ந்தோருக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. இவற்றை எல்லாம் வெற்றி கொண்டு சந்திரிகா முன்னேறிவிடுவாரா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.




ஜே.வி.பி.யினருடன் அவர் சூசகமாக நடத்தியுள்ள அண்மைய பேச்சுக்களின் போது அரசியலமைப்புத்திருத்தம் பற்றி எதுவும் அடிபடவில்லை. அத்துடன் அலரி மாளிகைக்கும் (பிரதமரின் வாசஸ்தலம்) சனாதிபதி மாளிகைக்கும் இடையில் அலைத் தாக்க நிவாரணப்பணிகளிலும் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

சுனாமி அலை தாக்கிய அன்று பிரதமர் ராஜபக்ஷ அலரிமாளிகையில் மத வைபவமொன்றில் தீவிர ஈடுபாட்டுடன் காணப்பட்டார். இந்நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணிலின் உத்தரவுக்கேற்ப ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினரான பந்துல குணவர்த்தன அறுகம் குடாவுக்கு சென்றார். அங்கு அவர் வெள்ளத்தில் அகப்பட்டு ஒரு வீட்டின் கூரை மீது இருந்து தத்தளித்துக் கொண்டிருந்தார். அவருக்கு ஆதரவு தெரிவித்து மீட்புக் குழு வினரை அனுப்புவதாக ரணில் சொல்லிக் கொண்டிருக்கும் போது பிரதமர் ராஜபக்ஷ அப்படி ஒன்றும் பெரிய அனர்த்தமில்லை அது வழமையாக ஏற்படும் கடல் கொந்தளிப்பு என்றும் கூறினார். பின்னர் நிலைமையை உணர்ந்த அவர் தமது மத வைபவங்கள் யாவற்றையும் முடித்துக் கொண்டு லண்டனிலுள்ள சந்திரிகாவிடம் தொடர்பு கொண்டார். ஆயினும் அங்கிருந்தும் பதில் அந்நேரம் கிடைக்கவில்லை. இந்நிலையில் மக்களுக்கு தேவையான சகல உதவிகளையும் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது உறுப்பினர்களுமே முன்னின்று செய்தனர். முன்பு ரணில் விக்கிரமசிங்க அரசு காலத்தில் இரத்தினபுரியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது அரசாங்கம் உடனடியாக நடவடிக்கையில் இறங்கியது. ஆயினும் தற்போதைய அரசு தமக்குள் பல முரண் பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்ளாதிருக்கின்றது. இவற்றுக்கெல்லாம் அதிகாரப் போட்டியே காரணமாகும். அத்துடன் சந்திரிகா அரசுக்குள் இருக்கும் அமைச்சர்களும் எம்பிக்களும் ஒருவருக்கொருவர் குற்றம் சுமத்தியும் வருகின்றனர்.


சந்திரிகா

அதன் ஒரு அங்கமாக அமைச்சர் ரணவிராஜ பிரதமர் ராஜபக்ஷவையே இந்த விவகாரத்தில் உடனடியாக ஈடுபட்டு நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவித்துள்ளார். எனினும் ராஜபக்ஷ அது ஒரு கட்டுக்கதை எனக் கூறியுள்ளார்.

இவ்வாறு சிறிலங்கா அரசு தமக்குள் பிரச்சினைகளில் ஈடுபட்டிருக்கும் போது பாதிக்கப்பட்ட மக்களின் நிலை அதோகதி என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது உண்மையாகும்.

(சண்டே லீடரில் சுரனிமல)
**தமிழில் – வடிவேல்**

# ஆதரவற்றோர் மீது பாலியல் துஷ்பிரயோகம்

## தென் பகுதி நலன்புரி நிலையங்களில் சம்பவம்

(கொழும்பு)

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டு தென்பகுதி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பெண்கள், சிறுவர்கள் மீது துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர்.

நிவாரணப் பணியாளர்கள் என கூறிவரும் இளைஞர் குழுவும், சில அரசாங்க அதிகாரிகளும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள ஆதரவற்ற பெண்கள், சிறுவர்களை தமது பாலியல் இச்சைகளுக்குப் பயன்படுத்தியுள்ளது தெரியவந்துள்ளது.

அத்துடன் நலன்புரி நிலைய மக்களுக்கான நிவாரணப் பொருட்களும் அவர்களைச் சென்றடையாது சூறையாடப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசாங்க அதிகாரிகள் சிலரின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இவ்ஈனச் செயல்கள் குறித்து பல்வேறு அமைப்புக்களும் கண்டனம் செய்துள்ளன.

இதேவேளை சுனாமி கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து முகாம்களிலுள்ள பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீது துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை குறித்து தகவல் கிடைத்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று பொலிஸ்மா அதிபர் சந்திராபெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்யும் நடவடிக்கைகள் முகாம்களிலே மேற்கொள்ளப்படும். இந்த அகதி முகாம்களின் பாதுகாப்பிற்கென தலா 2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.


முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் பெண்களும் சிறுவர்களுமாவர். அகதி முகாம்களில் சிறுவர் துஷ்பிரயோகம் பாலியல் வல்லுறவுகள் இடம் பெறுவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் எனினும் இது தொடர்பான உரிய முறைப்பாடுகள் தமக்கு கிடைக்கவில்லையெனவும் தெரிவித்த அவர் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்குமாறு பொலிசாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கடந்த வாரத்தில்...

**27.12.2004-02.01.2005**

### 27

* தாயகப் பிரதேசத்தில் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ திட்டமிடல் அபிவிருத்தி செயலகத்தில் புலிகளால் செயலணிக்குழு அமைப்பு.


செயலணிக்குழு அமைப்பு

* சுனாமி பேரலையால் பாதிப்புக்குள்ளாகி நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உணவு, உடை, இதர உதவிகளை வழங்கிப பராமரிப்புப்பணி ஆரம்பம்.

* சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளவர்கள் தமது நிலை குறித்து புலம் பெயர்ந்த நாடுகளில் வசிக்கின்ற அவர்களின் உறவினர்களுக்கு இலவசமாகத் தகவல் அனுப்ப பன்னாட்டுத் தொலைத்தொடர்பகம் (நந்தவனம்) ஏற்பாடு.

### 28

* முல்லைத்தீவுப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் 200 சடலங்களும், வடமராட்சி கிழக்கில் 55 சடலங்களும் மீட்பு.


சடலங்கள் மீட்பு

* சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு வெளிநாட்டு நிறுவனங்களும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகளும் உதவி செய்யவேண்டும். விடுதலைப்புலிகளின் கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை வேண்டுகோள்.


கேணல் சூசை வேண்டுகோள்

* புதுக்காட்டுச் சந்தி, முள்ளியவளை செயலணிக்குழுவிடம் அவசர மனிதாபிமானப் பணிகளுக்கு உதவுவதாக பல்வேறு நிறுவனங்கள் உறுதி.

* சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட ஒன்பது மாதக் குழந்தை புலிகளால் உயிருடன் மீட்பு.

### 29

* சுனாமி பேரலையால் உறவுகளைப் பறிகொடுத்த அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் அனுதாபம் தெரிவித்து பாதிப்புற்ற மக்களுக்கு உதவுமாறு கோரியுள்ள தோடு உதவியோருக்கு நன்றியும் தெரிவிப்பு.


பாதிப்புற்ற மக்களுக்கு தேசியத்தலைவர் அனுதாபம்


* சுனாமி பேரலையால் அழிவடைந்த தென்பகுதி கடற்படைத்தளங்களுக்கு கடற்படைத் தளபதியும், கூட்டு நடவடிக்கைத் தளபதியுமான வைஸ்அட்மிரல் தயாசந்தகிரி விஜயம்.

* சுனாமி பேரலையால் இலங் கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உட னடி நிவாரணத்தை வழங்குவதற்கும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்குமான தேசிய மட்டக்குழுவில் விடுதலைப் புலிகளையும் பங்கேற்குமாறு சனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் அறிவிப்பு.

* முல்லைத்தீவில் மேலும் 100 சடலங்களும், வடமராட்சி கிழக்கில் மேலும் 25 சடலங்களும் மீட்பு.

### 30

*. அரசியல் துறைப்பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரை இலங்கைக்கான நோர்வேத்தூதுவர், ஐ.நா அமைப்பு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள்



ஐ.நா.பிரதிநிதிகளுடன்

தனித்தனியாகச் சந்திப்பு.

* யாழ்.வடமராட்சிக்கு விஜயம் செய்த பிரதமர் மகிந்தராஜபக்ஷ, அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே மற்றும் ஜே.வி.பியினரை நலன்புரிநிலையங்களுக்குள் பிரவேசிக்க விடாது மக்கள் விரட்டினர்.

*.தமிழீழத் தேசியத் தலைவரின் பணிப்பிற்கமைய சகலதுறை ஆளணியும் வளங்களும்மீட்புப் பணியில்.

*. தென்பகுதியில் பல்வேறு தரப்பினரால் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் வட பகுதிக்கு வருகை.


நிவாரணப் பொருட்களுடன் வாகனத்தொடரணி

*.. சமாதானச் செயலகத்தில் தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனை மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் குழுவினர் சந்தித்தனர்.


ம.ம.முன்னணியுடன்...

### 31

*'சுனாமி' அனர்த்தத்தினால் வட-கிழக்கு இழப்புக்கள், பாதிப்புக்களை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் வெளியிட்டது.

*.இயற்கை அனர்த்தத்தால் உயிரிழந்த மக்களுக்காக குடாநாட்டில் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

### 01

*மட்டு- அம்பாறை மாவட்ட மக்களை 'சுனாமி 'அனர்த்தத்தின் பின் மீளக் குடியமர்த்தும் திட்டங்களை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் வகுத்து வருகிறார். புவியியல் ரீதியாக நோக்கினால் இந்த அனர்த்தத்தின் பின் வேறு இடங்களில் மக்களைக் குடியமர்த்த வேண்டியுள்ளதென மட்டு- அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு அக்கரைப் பற்றில் செய்தியாளர்கீளிடம் தெரிவிப்பு.

* புவிநடுக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட முல்லை இறால் குளத்திலிருந்து 23 சடலங்கள் மீட்கப்பட்டன.

* முல்லை நகரை மீண்டும் பழைய நிலைக்குக் கட்டி எழுப்ப வேண்டும். அதை முன்னெடுக்கும் பணி எம் ஒவ்வொரு வரிடமும் உள்ளதென தமிழீழகடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை முல்லை. நிகொட் திட்டப் பணிமனையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிப்பு.

*மட்டக்களப்பு உணவுக் களஞ்சியத்திலிருந்து நிவாரணப் பொருட்களை எடுக்க முயன்ற பௌத்த பிக்குவின் முயற்சி முறியடிப்பு.

*கொழும்பிலும் மலைநாட்டின் சில பகுதிகளிலும் நில அதிர்வு உணரப்பட்டது.

*யாழ். மாவட்டத்தின் புதிய அரச அதிபராக கணேஷ் பொறுப்பேற்றார்

*மட்டு- அம்பாறை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட இடங்களை கேணல் பானு பார்வையிட்டார்.


*குடத்தனை நலன்புரி நிலையத்தை இராணுவத்தினர் எரித்து நாசமாக்கினர்.

*சிறிலங்காவின் இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட யாழ். வீஜயம்

### 02

*முல்லை, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மீட்பு அணிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தொடர் மீட்பு நடவடிக்கையில் 10 சடலங்கள் மீட்கப்பட்டன.

*கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டோருக்கு 10 லட்சம் பெறுமதியான உடைகளை மேஜர் செங்கோலனின் தந்தை புதுக்காட்டுச் சந்தியில் அமைக்கப்பட்ட செயலணிக் குழுவிடம் கையளித்தார்.


பாதிப்புற்றோருக்கு உதவி

## கனடாவின் பேரழிவு நிவாரண உதவிக்குழுவினர் இருநூறு பேர் இன்று இலங்கை வருவர்

கனடாவின் பேரழிவு நிவாரண உதவிக் குழு இன்று சிறிலங்காவை சென்றடையும் என கனடாவின் பாதுகாப்பு அமைச்சர் பில் கிறஹாம் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலைகளால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ள சிறிலங்காவின் கிழக்குப் பகுதிக்கு 200 பேரடங்கிய பேரழிவு நிவாரண உதவிக் குழு ஒன்று விரைவில் அனுப்பி வைக்கப்படுமெனவும் பிரதமர் போல் மாட்டின் நேற்று அறிவித்திருந்தார். இந்தக் குழு அம்பாறையில் மையம்கொண்டு செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. டார்ட் என அழைக்கப்படும் இந்தக் குழு நடமாடும் வைத்தியசாலை வசதிகள் மற்றும் நீர் சுத்திகரிப்புச் சாதனங்கள் என்பவற்றை அம்பாறைக்கு எடுத்துச் செல்லவுள்ளது.

இதேவேளை கனேடியப் பேரழிவு அனர்த்த நிவாரண விற்பன்னர்கள் அடங்கிய 17 பேர் கொண்ட குழுவொன்று வார இறுதியில் சிறிலங்காவைச் சென்றடைந்துள்ளது.

இந்தக் குழு சிறிலங்கா அரசாங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் நிறுவன அதிகாரிகளையும் கனேடிய உதவிப் பணியாளர்களையும் சந்தித்து கலந்துரையாடலை நடத்தியுள்ளது. உதவிகள் முறைப்படி ஒருங்கிணைக்கப்படாவிட்டால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து முன்கூட்டியே தெரிந்து கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை இவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். நன்கொடை வழங்கும் நிறுவனங்களுக்கிடையில் ஒத்துழைப்பு நிலவவேண்டியது மிக முக்கியமானதென சிறிலங்காவிற்கான கனேடியத் தூதுவர் வலேரி றேமண்ட் சுட்டிக்காட்டியுள்ளார். கனடாவிலிருந்து விரைந்து சென்றுள்ள குழுவுக்கு போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். கனேடியக் குழுவினர் நேற்று சிறிலங்கா இராணுவ உலங்குவானூர்திகள் மூலம் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். இதேவேளையில் கனடாவைச் சேர்ந்த எட்டுப்பேர் கொண்ட தமிழர் மருத்துவக்குழு ஒன்று மட்டக்களப்பைச் சென்றடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சுனாமி தாக்கத்தால் பாதிக்கப்பட்டோருக்கு

## அடிப்படை வசதிகளை செய்துகொடுக்க 1.5 பில்லியன் டொலர்கள் தேவை

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுபபதற்கு 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை செலவு செய்யவேண்டும் என நிதியமைச்சின் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சுனாமி அனர்த்தத்தால் கிழக்கு, தெற்கு, மேல் மாகாணங்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் வி.பி ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

பெருந் தெருக்கள் புகையிரதத் திணைக்களம்,உல்லாசத்துறை, மீன்பிடித்துறை, துறைமுகங்கள் உட்பட கல்வித்துறை போன்றவற்றிற்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை கல்வி, சுகாதார, மீன்பிடித்துறை ஆகியன வழமைக்குத் திரும்ப குறைந்தது ஆறுமாத காலம் எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு உட்பட பதின்நான்கு மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# தமது சம்பள அதிகரிப்புத் தொகையை வழங்க அதிபர்கள், ஆசிரியர்கள் தீர்மானம்

**- கடற்பேரலையால் பாதிக்கப்பட்ட மாணவரிற்கு உதவ -**

'சுனாமி'கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வித் தேவைகளுக்கென தமக்கு அரசால் வழங்கப்படவிருக்கும் சம்பள அதிகரிப்புத் தொகையை வழங்குவதென யாழ்.மாவட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் ஏகமனதாக முடிவெடுத்துள்ளனர். பலர் தமது ஒருமாதச் சம்பளத்தினை வழங்குவதற்கும் முடிவு செய்துள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதி தென்மராட்சி வலய அதிபர்களுக்கான கூட்டமும், 4 ஆம் திகதி யாழ். வலய கோப்பாய்க் கோட்ட அதிபர், ஆசிரியர்களுக்கான கூட்டமும், நேற்று வலிகாம வலய அதிபர்களுக்கான கூட்டமும் நடைபெற்றுள்ளது. இம் மூன்று கூட்டங்களிலும் கலந்து கொண்ட அதிபர், ஆசிரியர்களினால் அரசால் தங்களுக்கு வழங்கப்படவிருக்கும் 2500 ரூபாவுக்கு மேற்பட்ட சம்பள அதிகரிப்பு எதுவோ அவ்வதிகரிப்புத் தொகையினை சுனாமி கடல் அலையினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வித் தேவைகளுக்காக வழங்குவதான முடிவினை ஏக மனதாக எடுத்துள்ளனர்.

மேலும் பல அதிபர், ஆசிரியர்கள் தங்கள் ஒரு மாதச் சம்பளத்தினை வழங்குவதெனவும் தெரிவித்துள்ளனர். அத்துடன் மேற்படி அனர்த்தத்தினால் நொந்து போயுள்ள மக்களிடம் நேரடியாகச் சென்று உளவளரீதியாக உதவுவதெனவும் தீர்மானித்துள்ளதன்படி முதற்கட்டமாக கோப்பாய்க் கோட்ட அதிபர்கள் அனைவரும் எதிர்வரும் 08 ஆம் திகதி சனிக்கிழமை பளைப்பகுதி நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களிடம் சென்று தங்கள் பணிகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

# வவுனியா அரச அதிபராக சண்முகம் பதவியேற்பு

வவுனியா மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக எஸ். சண்முகம் பதவியேற்றுள்ளார்.

கடந்த பத்து ஆண்டுகளாக அரசாங்க அதிபராக இருந்த கே.கணேஸ் யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த எஸ்.பத்மநாதன் உலக வங்கியினால் வடக்கு கிழக்கு மாகாணத்தில் கட்டப்படவுள்ள வீடமைப்பு திட்டத்திற்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். முதற் கட்டமாக ஆயிரம் வீடுகள் வடக்கு கிழக்கில் கட்டப்பட்டு வருகின்றன. கடந்த 20 வருடகால யுத்தம் காரணமாக நேரடியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கே இந்த வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் கட்டப்பட்ட பல வீடுகள் ஆழிப் பேரலையினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# நிவாரணப் பொருட்களை ஜப்பானிய நிறுவனம் மன்னார் அரசியல் துறையிடம் ஒப்படைத்தது

(மன்னார்)

மன்னாரில் இயங்கும் ஜப்பான் நிறுவனமான "யாக்கா மன்றிக்கப்" நிறுவனம் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொருட்களை மன்னார் அரசியல் துறையினர் ஊடாக கையளித்துள்ளது.

அத்துடன் மன்னார் மாவட்ட தொழிற்சங்கங்களின் இணையத்தினரும் பாதிப்புற்ற மக்களிற்கு ஒரு நிதியத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இதேவேளை அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தினால் பாதிப்புற்ற மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குவதற்கு மன்னார் பிரதேச குழுவினர் மூன்றே கால் இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளனர். இவற்றில் முக்கியமாக மருந்துப்பொருட்கள், பால்மா வகைகள், தண்ணீர் போத்தல்கள், ஆடைகள் போன்றன அடங்கும்.

(18)

# மட்டக்களப்பில் அடைமழை பல கிராமங்கள் வெள்ளத்தில்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த அடைமழை காரணமாக மாவட்டத்தின் தாழ்ந்த பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணி வரை 55.5 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். கடந்த சனிக்கிழமை பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளம் வடிந்து செல்வதற்கு முன்னர் மீண்டும் மழை பெய்ய ஆரம்பித்ததால் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களில் வெள்ளம் நிரம்பியுள்ளது. இலங்கையின் வடமேல் பருவப்பெயர்ச்சிக் காலநிலை காரணமாக இந்த அடை மழை பெய்து வருவதாகவும், இந்தக் காலநிலை தொடரும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆரையம்பதி புதிய காத்தான்குடி, வவுணதீவு கோரதீவு, புன்னச்சோலை, இருதயபுரம களுதாவளை, பூம்புகார், வந்தாறு மூலை, சித்தாண்டி ஏறாவூர், ஆகிய தாழ்ந்த கிராமங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

# விசேட பாராளுமன்ற சட்டத்தின் மூலம் தேசத்தைக் கட்டியெழுப்ப அதிகாரசபை

*–சனாதிபதி செயலகம் அறிவிப்பு*

(கொழும்பு)

விசேட பாராளுமன்ற சட்ட மூலம் ஒன்றின் மூலம் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான அதிகார சபை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு சனாதிபதி சந்திரிகா மூன்று விசேட செயற் குழுக்களை அமைத்துள்ளதாக சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரையும், உடமைகளையும் பாதுகாத்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு துரிதகதியில் நிவாரணங்களை வழங்குதல், புனரமைப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தல் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்தல் போன்றவை இந்தச் செயற் குழுக்களின் பணிகளாக அமையும்.

இதேவேளை மக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் சமாதானத்திற்கான அமைச்சின் செயலாளர் திலக்ரணவிராஜ நிவாரணத்தை வழங்குவதிற்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் மற்றும் சட்டத்தையும், சமாதானத்தையும் பாதுகாத்தல் போன்றவற்றிற்கு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. உடமைகளையும், உயிரையும் பாதுகாத்தல் மற்றும் நிவாரணங்களை வழங்குவதற்கான செயற்குழு டாக்டர் தாராடிமெல் தலைமையில் இயங்கவுள்ளது.

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான செயற்குழு மனோதித்தவெலவின் தலைமையில் இயங்கவுள்ளது எனவும் இதனைத் தவிர அரசமற்றும் தனியார் துறையைச் சேர்ந்தவர்களும் தனியார் துறையில் அங்கம் வகிப்போராக தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியக் கடற்படையின் உதவியுடன் காலி துறைமுகம் புனரமைப்பு

(கொழும்பு)

கடற் பூகம்பத்தினால் சேதமடைந்த காலித் துறைமுகத்தின் புனரமைப்பு நடவடிக்கைகள் பெருமளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக கடற்படையின் தென் பிராந்திய கட்டளை அதிகாரி கொமோடோர் கலிஸ்ரோ குலரட்ண தெரிவித்தார்.

இந்த புனரமைப்பு நடவடிக்கைக்கு இந்திய கடற்படையின் உதவியும் கிடைந்துள்ளதாகவும், துறைமுக உட்புகும்வழியில் இருந்த இடிபாடுகளை அகற்றும் பணிகள் வெற்றிகரமாக மேற்கொண்டதாகவும் தெரிவித்த அவர், இதனால் தென்பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களைக் கொண்டு செல்வதில் சிக்கல்கள் தோன்றாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


**வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள்அலகு**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

*பொதுக் கலைமாணித் தேர்வு–பகுதிII–2001 (வெளிவாரி) செய்முறைப் பரீட்சை (DTAG.3.2) நாடகமும் அரங்கியலும்*

மேற்படி தேர்வுக்கான செய்முறைப்பரீட்சை 24.01.2005 தொடக்கம் நுண்கலைத்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் தங்களுடைய பரீட்சை அனுமதி அட்டையுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்வதுடன், செய்முறைப்பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளை வெளிவாரிப் பட்டப்படிப்பு பிரிவில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

*முக்கிய குறிப்பு:*

செய்முறைப் பரீட்சை முடிவடைந்ததும் பரீட்சை அனுமதி அட்டையை வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகில் தவறாது ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**துணைவேந்தர்,**

**யாழ்.பல்கலைக்கழகம்.**

(சி.11179)



**புதிய கணனி வகுப்புக்கள் ஆரம்பம்**

முன்னர் புதுக்குடியிருப்பிலும் மல்லாவியிலும் இயங்கி வந்த ரெக்கணனிப் பயிற்சி நிலையம் தற்பொழுது புதிய நவீன வசதிகளுடன் வட்டக்கச்சியில் இயங்குகிறது. இது தனது புதிய தொகுதி ஒன்றை 10.01.2005 அன்று காலை 10.00 மணிக்கு வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையில் ஆரம்பிக்கிறது.

**கற்கை நெறிகள்**
**MS-OFFICE**

1.INTRODUCTION TO COMPUTER
2.WINDOWS
3.MS-WORD
4.MS-EXCEL
5.MS-POWER POINT
6.MS-ACCESS

காலம்:-04 மாதங்கள்
கட்டணம்:-3000.00-தவணைமுறையில் கட்டணங்கள் செலுத்தப்படலாம்.
*.விரிவுரைகள் அனைத்தும் தமிழில் நடாத்தப்படும். வேலை செய்பவர்களுக்கு அவர்கள் விருப்பப்படி வகுப்புக்கள் நடாத்தப்படும்.
*.சிறுவர்களுக்கான வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படுகிறது.
01.ஆண்டு 5 தொடக்கம் 10 வரையான மாணவர்கள்.
02) 02 மாதங்கள்.
03) 700.00 மொத்தக் கட்டணம்
இடம்:-ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணை, வட்டக்கச்சி

(சி.10852)


**31 ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்**

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 22 | | 10 |
| 07 | | 12 |
| 1928 | | 2004 |



**இராமலிங்கம் இராமகிருஷ்ணன்**

(சின்னராசா)

**நீர்வேலி வடக்கு நீர்வேலி** (யாழ்)

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 07.01.2005 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கீரிமலையிலும், சபிண்டிகரணக் கிரியைகள் 09.01.2005 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கிரியைகளில் கலந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

**தகவல்:**
**இ.நிசாந்தன் (மகன்)**
**போராளி.**

(5529)

# வறுமைக் கோட்டிற்குக்கீழ்வாழும் குழந்தைகள் உ.பி.யில் அதிகம்

உலக நாடுகளில் குழந்தைகளின் வாழ்க்கைத்தரம் பற்றி யுனிசெப் நிறுவனம் கணக்கெடுத்து வருகிறது. இந்தியாவில் கணக்கெடுத்த போது உத்தரப் பிரதேச மாநிலத்தில் அதிக அளவில் குழந்தைகள் வறுமைக் கோட்டிற்கு கீழே வசிப்பது தெரிய வந்திருக்கிறது. இந்தியாவில் 1.10 இலட்சம் குழந்தைகள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வசிக்கிறார்கள். அவர்களில் 24,196 பேர் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். இதனால் மொத்த எண்ணிக்கையில் 29.9 சதவீதம் பெற்று உத்தரப்பிரதேசம் முதலிடம்பெற்றுள்ளது.

பீகார் மாநிலம் 2ஆவது இடத்தில் உள்ளது. மத்திய பிரதேசம் 9 சதவீதத்துடன் 3ஆவது இடத்தையும், மராட்டிய மாநிலம் 4 ஆவது இடத்தையும், மேற்கு வங்காளம் 5ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. ஒரிசா மாநிலம் 6 ஆவது இடத்தையும், ஜார்க்கண்ட் மாநிலம் 7ஆவது இடத்தையும், ஆந்திரா 8ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. உத்ராஞ்சல் மாநிலம் கடைசி இடத்தைப் பெற்றிருக்கின்றது. இங்கு 1137 குழந்தைகள் மட்டுமே வறுமைக்கோட்டிற்குக் கீழ் வசித்துவருகின்றார்கள்.



இந்திய விமானப்படைக்கு சொந்தமான மிக்-21 ரக விமானம் ராஜஸ்தான் மாநிலம் பிகாரின் அருகே தரையில் மோதி தீப்பிடித்தது. இயந்திரக் கோளாறு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டது. விமானி முன்கூட்டியே விமானத்தில் இருந்து குதித்து உயிர் தப்பினர். எரிந்து கிடக்கும் விமானத்தின் பாகத்தை அதிகாரிகள் பார்வையிடும் காட்சி.

# சுனாமியால் பாதித்த நிக்கோபார் கடற்பகுதியில் விரைவில் ஆய்வு

சுனாமியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள அந்தமான் நிக்கோபார் தீவுகளைச் சுற்றியுள்ள கடல் பகுதிக்குள் நில அமைப்பில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து இந்திய கடற்படைக் கப்பல் ஒன்று விரைவில் ஆய்வு செய்யவுள்ளது. அந்தமானில் உள்ள நிக்கோபார் தீவுகள் கடற்கொந்தளிப்பால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

நிக்கோபார் மாவட்டத்தில் உள்ள கார் நிக்கோபார், ஹட் வளைகுடா, கேம்பெல் வளைகுடா ஆகியவை பலத்த சேதம் அடைந்தன. இதனைச் சுற்றியுள்ள தீவுக் கூட்டங்களிலும் கடல் பரப்பில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனை ஆய்வு செய்வதற்காக கடற்படை கப்பல் ஒன்று விரைவில் செல்லவுள்ளது. ஐ.என்.எஸ். தர்ஷக் என்ற இந்தக் கப்பலின் கப்டன் ஜெய்பால் இது குறித்து கூறியதாவது:

அந்தமான் நிக்கோபார் கடல் பகுதியில் தண்ணீரின் ஓட்டத்தில் மாற்றங்கள் இருப்பதை நாங்கள் கவனித்துள்ளோம். கடலின் உள்ளே இருக்கும் திட்டுப்பகுதிகளும் வழக்கத்துக்கு மாறாக காணப்படுகின்றது. எனினும் அங்குள்ள நிலவரம் குறித்து முழுமையாகத் தெரியவில்லை. ஆய்வுக்குப் பிறகு விபரங்கள் தெரியவரும். கடற்படையின் உத்தரவுக்காக காத்திருக்கின்றோம். வந்தவுடன் ஆய்வுப் பணிகளை தொடக்கி விடுவோம். இவ்வாறு ஜெய்பால் கூறினார்.

# பெற்றோலியப் பொருட்களின் விலைகளில் மாற்றமில்லை

பெற்றோல், டீசல் விலைகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று எந்தவித நிர்ப்பந்தமும் அரசிடம் இருந்து வரவில்லை. இதனால் பெற்றோல், டீசல் விலையில் மாற்றம் இல்லை. பழையவிலையே தொடர்ந்து நீடிக்கும் என்று மத்திய பெற்றோலியத்துறை அமைச்சர் மணி சங்கர் ஐயர் டில்லியில் நிருபர்களுக்கு பேட்டி கொடுத்தார். எப்போது பெற்றோலியப் பொருட்களின் விலை மாற்றி அமைக்கப்படும் என்று இப்போது சொல்ல முடியாது. இவ்வாறு மத்திய மந்திரி மணி சங்கர் ஐயர் கூறினார்.

# 3 ஆம் கட்ட தேர்தலுக்கு தயார்

(பாட்னா)

பீகார் மாநிலத்தில் அடுத்த மாதம் 3 கட்டமாக தேர்தல் நடக்கிறது. இதையடுத்து ஒவ்வொரு கட்சியும் வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

குறிப்பாக முதலமைச்சரும் லல்லு பிரசாத் மனைவியுமான ராப்ரிதேவியை எதிர்த்து யாரை வேட்பாளராக நிறுத்தலாம் என்று ஒவ்வொரு கட்சியினரும் தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகின்றார்கள்.

இந்த நிலையில் பீகார் மாநிலத்தில் உள்ள பிராந்தியக் கட்சியான ராஷ்ட்ரவாதி ஜனதா கட்சி வேலைக்கார பெண் ஒருவரை ராப்ரிக்கு எதிராக நிறுத்துவதாக அறிவித்து இருக்கிறது.

## தற்காலிகமாக பொறுப்பேற்பு


இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக பணியாற்றி வந்த ஜே.என். தீட்சித் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து அவர் வகித்து வந்த பதவியை பிரதமரின் விசேஷ ஆலோசகர் எம்.கே. நாராயணன் தனது பொறுப்புடன் சேர்த்துக் கவனிப்பார். இதற்கான உத்தரவை நேற்று முன்தினம் பிரதமர் அலுவலகம் பிறப்பித்தது. நாராயணன் ஏற்கனவே துப்பறியும் துறையின் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு விவகாரங்களில் அனுபவம் பெற்றாவர்.






# சிட்னி டெஸ்டிலும் பாக். அணிக்கு படுதோல்வி

## தொடரை முழுமையாக கைப்பற்றியது அவுஸ்.



அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் சிட்னியில் நடைபெற்று வந்த மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியிலும் அவுஸ்திரேலிய அணி ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 3-0 என்ற நிலையில் முழுமையாகக் கைப்பற்றிய அவுஸ்திரேலியா வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இம்மாதம் முதலாம் திகதி ஆரம்பமான மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடி முதல் இனிங்சில் 304 ஓட்டங்களைப் பெற்றது.


பதிலுக்கு அவுஸ்திரேலியா தனது முதல் இனிங்சிற்காக 568 ஓட்டங்களைப் பெற்றது.

264 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் இரண்டாவது இனிங்சை ஆடிய பாகிஸ்தான் ஷேன் வோர்ன், மெக்கில் ஆகியோரின் சுழலில் தாக்குப்பிடிக்க முடியாது 325 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்து வீச்சில் ஷேன் வோர்ன் நான்கு விக்கெட்டுக்களையும், முதல் இனிங்சில் பாகிஸ்தானின் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய மெக்கில் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

துடுப்பாட்டத்தில் அசீர் கமால் 87 ஓட்டங்களையும், ஜசீர் ஹமீட் 63 ஓட்டங்களையும், அப்ரிடி 46 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பதிலுக்கு 62 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இனிங்சிற்காகக் களமிறங்கிய அவுஸ்திரேலியா9.3 ஓவரில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.



## கேப்டவுன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி;

## இங்கிலாந்து வெற்றிபெற 501 ஓட்ட இலக்கு



கேப்டவுனில் நடைபெற்றுவரும் தென்னாபிரிக்க - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற 501 ஓட்டம் என்ற வெற்றி இலக்கை தென்னாபிரிக்கா நிர்ணயித்துள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா முதல் இனிங்சில் நிதானமாக ஆடி 441 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்கு இங்கிலாந்து அணியை 163 ஓட்டங்களுக்குள் சுருட்டிய தென்னாபிரிக்கா 278 ஓட்டங்கள் முன்னிலையில் தொடர்ந்து இரண்டாவது இனிங்சில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 222 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. துடுப்பாட்டத்தில் முதல் இனிங்சில் 149 ஓட்டங்களைக் குவித்த கலிஸ் 66 ஓட்டங்களையும், டிப்பன்னர் 44 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஜோன்ஸ், பிளின்டொப் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதன் மூலம் இங்கிலாந்து அணி வெற்றிபெற 501 ஓட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

வெற்றி இலக்கை நோக்கி ஆடும் இங்கிலாந்து ஓட்டமெதுவும் பெறாமல் ரெஸ்கொதிக்கை இழந்ததுடன் நேற்றைய நான்காம் நாளில் 41 ஓவர்கள் பந்து வீசப்பட்ட நிலையில் 78 ஓட்டங்களைப் பெற்று இரண்டு விக்கெட்டுக்களை இழந்திருந்தது.இன்று போட்டியின் இறுதி நாளாகும்.



## உலக ஆசிய 11 பேர் கிரிக்கெட் ரிக்கெட் விற்பனை மும்முரம்

சுனாமி அலையால் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நிதி திரட்டுவதற்காக ஆசிய 11 பேர் - உலக லெவன் அணிகள் இடையே 2 ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடத்தப்படுகின்றது. இதன் முதல் ஆட்டம் மெல்போர்னில் வரும் 10 ஆம் திகதி பகல்-இரவாக நடக்கிறது.

இந்தப் போட்டிக்கான ரிக்கெட் விற்பனை நேற்று முன்தினம் தொடங்கியது. விற்பனை தொடங்கிய அரை நாளில் 20 ஆயிரம் ரிக்கெட்டுக்கள் விற்றுத் தீர்ந்தன.

## ஆசிய 11 பேர் அணியிலிருந்து விலகினார் டெண்டுல்கர்?



காயம் காரணமாக சுனாமி கிரிக்கெட் போட்டியில் இருந்து விலகினார் சச்சின். சுனாமி பேரழிவில் ஏராளமானோர் பாதிக்கப்பட்டனர். இவர்களுக்கு நிதி திரட்ட உலக 11 பேர் மற்றும் ஆசிய 11 பேர் மோதும் இரண்டு ஒருநாள் போட்டிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதல் போட்டி வரும் 10 இல் மெல்போர்னில் நடக்கிறது. ஆசிய 11 பேர் அணியில் சச்சின் இடம் பெற்று இருந்தார். இடது முழங்கை காயத்தால் (டென்னிஸ் எல்போ) அவதிப்பட்டு வரும் இவர், டாக்டர்களின் அறிவுரையை மீறி போட்டியில் பங்கேற்க விருப்பம் தெரிவித்திருந்தார். ஆனால் நேற்றுத் தனது இயலாமையை சச்சின் வெளியிட்டார்.

இவர் கூறியிருப்பதாவது, இடது முழங்கைப் பகுதிக்கு குறைந்தது ஒரு மாதம் ஓய்வு அளிக்கவேண்டும். இந்தக் கால கட்டத்தில் ஒரு பந்து கூட விளையாடக் கூடாது என்று டாக்டர்கள் கண்டிப்புடன் கூறிவிட்டனர். இதனால் சுனாமி கிரிக்கெட்டில் பங்கேற்க வாய்ப்பில்லாமல் போனது. இப்போட்டியில் விளையாடமுடியாவிட்டாலும், இந்த மகத்தான பணியில் நிச்சயமாகக் கலந்து கொள்வேன் இதற்காக மெல்போர்ன் செல்லவுள்ளேன். சுனாமியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது ஒரு வழியில் உதவ ஒவ்வொருவரும் முன்வர வேண்டும் இவ்வாறு சச்சின் கூறினார்.

## மூன்று நாடுகள் ஒரு நாள் போட்டி பாகிஸ்தான் அணியில் மாற்றங்கள்


மூன்று நாடுகள் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. டெஸ்ட் போட்டியில் ஆடிய ஆசிம் கமால், முகமது சமி, கனெரியா, இம்ரான் பர்கத், முகமது ஆசிப் ஆகியோர் நாடு திரும்புகின்றனர். அசார் மெக்மூத், முகமது ஹபிஸ், தபீக்உமர், ராவ் இப்திகர் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

.அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகள் கலந்துகொள்ளும் 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சிட்னியில் நடந்தது. இதைத் தொடர்ந்து அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவு ஆகிய 3 நாடுகள் மோதும் ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடக்கின்றது. வரும் 12 ஆம் திகதி இந்தப் போட்டி தொடங்குகிறது.

## உலக செஸ் வரிசை ஆனந்த் 2ஆவது இடம்

உலக செஸ் வீரர்களின் தர வரிசைப் பட்டியலை 'எலோ' ரேட்டிங் அடிப்படையில் 'பிடே' அமைப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி ரஷ்ய வீரர் காஸ்பரோவ் (2,804 புள்ளிகள்) முதலிடம் வகிக்கிறார். இந்திய வீரர் ஆனந்த் (2,786) 2ஆவது இடத்தில் உள்ளார். தபலோவ் (பல்கேரியா), விளாடிமிர் கிராம்னிக் (ரஷ்யா), பீட்டர் லெகோ (கங்கேரி), அலெக்சாண்டர் (ரஷ்யா), பீட்டர் சுவிட்லெர் (ரஷ்யா), பாக்ரோட் (பிரான்ஸ்), அலெக்ஸ்ஷிரோவ் (ஸ்பெயின்) ஆகியோர் 3 முதல் 10 வரையிலான இடங்களைப் பிடித்தனர்.

## இந்திய அணி நியூசிலாந்து செல்லாது இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் நாயர்



இலங்கை அணி திடீரென நியூசிலாந்து தொடரிலிருந்து விலகியதையடுத்து, இந்திய அணி அங்கு சென்று விளையாடலாம் என்ற கருத்து நிலவிவந்தது. ஆனால் இந்திய அணி பெரும்பாலும் நியூசிலாந்தில் விளையாடச் செல்லாது என்று கிரிக்கெட் சபை செயலர் எஸ்.கே.நாயர் செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளார்.

—அவர் மேலும் கூறுகையில், நியூசிலாந்து கிரிக்கெட் சபையிடம் இருந்து அழைப்பு வந்துள்ளது உண்மை தான்.ஆனால் அங்கு இந்திய வீரர்கள் செல்வதற்கு மிகச்சிறிய வாய்ப்பாக உள்ளது.என்றாலும் அது குறித்து உறுதிசெய்யப்படவில்லை. ஓரிரு நாளில் தெரியவரும் என்றார் நாயர்.

சுனாமியால்இலங்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டதை அறிந்து நியூசிலாந்தில் விளையாடிக் கொண்டிருந்த இலங்கை வீரர்கள் தொடரை இரத்துச் செய்துவிட்டு உடனடியாக நாடு திரும்பினர்.

இதற்கிடையே அந்த இடைப்பட்ட காலகட்டத்தில் ஓய்வில் இருக்கும் இந்திய அணியை அழைத்து நிலைமையை சமாளிப்போம் என நியூசிலாந்து கிரிக்கெட்சபை தெரிவித்திருந்தது.

## சுனாமி நிவாரண நிதிக்கு ஒலிம்பிக் கமிட்டி 4.5 கோடி ரூபா

சுனாமி நிவாரண நிதிக்கு ரூ.15 இலட்சம் வழங்கவுள்ளது அகில இந்திய கால்பந்து சம்மேளனம்.

சம்மேளனத்தின் தலைவர் பிரியரஞ்சன்தாஸ் முன்ஷி செவ்வாய்க்கிழமை இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

உலக 11 பேர் அணியுடன் காட்சிப் போட்டியை இந்தியாவில் நடத்துவதற்கு உலக சம்மேளனத்திற்கு கடிதம் எழுதியுள்ளதாகவும், அதில் கிடைக்கும் வருவாய் முழுவதையும் சுனாமி நிவாரணத்திற்கு அளிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுனாமி நிவாரணத்துக்கு ரூ.4.5 கோடி வழங்குவதாக அறிவித்துள்ளது சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி (ஐஓசி). தனது இணையத்தளத்தில் இத் தகவலை வெளியிட்டுள்ளது ஐஓசி.


## அவுஸ்திரேலிய பெண்கள் டென்னிஸ் ஜப்பானின் சுகியாமா தோல்வி

அவுஸ்திரேலியாவில் உள்ள கோல்ட்கோஸ்ட் நகரில் அவுஸ்திரேலிய பெண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் ரஷ்ய வீராங்கனை டினாரா சபினா 6-3,6-2 என்ற நேர் செட்களில் ஜப்பானின் அய் சுகியாமாவை வீழ்த்தினார். மற்றொரு போட்டியில் ரஷ்யாவின் நாடியாபெட்ரோவா 6-3,6-1 என்ற நேர் செட்களில் சீனாவின் ஜெங் ஜீயை வீழ்த்தினார். அமெரிக்காவின் ஏஞ்சலா ஹெயின்ஸ்- 6-3,6-1 என்ற செட்களில் பிரான்சின் ஸ்டெபானி கோஹன் அலோரோவையும் வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர். இரண்டாவது சுற்றில் மக்டலீனா மலீவா 7-5,6-2 என்ற நேர் செட்களில் செக்குடியரசைச் சேர்ந்த கிளாரா கோகலாவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.



லண்டனில் நடந்த பிரீமியர்ஷிப் கால்பந்து போட்டியில் கிரிஸ்டல்பேலஸ் 2-0 என்ற கோல் கணக்கில் அஸ்டன் விலா அணியை வீழ்த்தியது. கிரிஸ்டல் பேலஸ் அணியின் ஆன்ட்ரூ ஜான்சன் (வலது), அஸ்டன் விலா வீரர் லியன்.

## சிந்தனைக்கு



சுதந்திரம்தான் மனிதவாழ்வுக்கு அர்த்தத்தைக் கொடுக்கின்றது; முழுமையைக் கொடுக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 06-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## புதிய வடிவில் ஒடுக்குமுறை!

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் சகல நிவாரண நடவடிக்கைகளும் முப்படைகளின் கீழ் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் கொண்டுவரப்பட்டுள்ளது. இத்தகையதொரு திடீர் நடவடிக்கை ஏன்? சனாதிபதி சந்திரிகாவின் நோக்கம்தான் என்ன?

எப்பொழுதுமே ஒரு அனர்த்தத்தின்போது மீட்புப்பணி, அவசர நிவாரணப்பணி போன்றவற்றிற்கே ஆயுதப்படைத்தரப்பு பயன்படுத்தப்படுவதுண்டு. ஆனால் இலங்கையில் சுனாமியின் அனர்த்தம் முடிவுற்று 10 நாட்கள் கடந்துள்ள நிலையில் அதாவது மீட்பு மற்றும் அவசர நிவாரணப்பணிகள் முடிவுறும் நிலையில் நிவாரணப்பணிகள் மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் ஆயுதப் படைத்தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டதேன்?

இலங்கையைப் பொறுத்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பல பகுதிகளுக்கு சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பால் சென்று வரவோ, அங்கு நேரடியாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவோ முடியாது. இந்நிலையில் இந்நிவாரணப்பணிகளை ஆயுதப் படைத்தரப்பிடம் ஒப்படைப்பதானது நிவாரணப்பணிகள் சீராக நடைபெற வாய்ப்பில்லை என்பது மட்டுமல்ல, ஒரு பகுதி புறக்கணிக்கப்படுவதற்கும், ஓரம் கட்டப்படுவதற்கும் வாய்ப்பைக் கொடுப்பதாகவே இருக்கும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வழமை போலவே உலகை ஏமாற்றும் வகையிலானதொரு அறிவிப்பை வெளியிட்டிருந்தார். அதாவது அரசாங்கத்துடன் நிவாரணப் பணிகளில் ஈடுபட விடுதலைப்புலிகளுக்கு அழைப்புவிடுத்திருக்கின்றோம் என்பது. ஆனால் இது ஒரு கண்துடைப்பான அறிவிப்பு மட்டுமே. வழமைபோலவே வாய்ப்பேச்சிற்கு அப்பால் சனாதிபதி சந்திரிகா செல்லவில்லை.

இதேவேளை இதற்கு மாறான செயற்பாடுகளிலேயே அரசாங்கம் அக்கறை காட்டியது. அதாவது தமிழர் தாயகப் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டிருந்த நிவாரணப் பணிகளில் இடையூறுகளை விளைவிக்கும் சில முயற் சிகளையே மேற்கொண்டது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இவ்இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன.

இத்தகையதொரு நிலையில் நிவாரணம் மற்றும் புனர் வாழ்வுப்பணிகளை ஆயுதப்படைத்தரப்பிடம் சனாதிபதி சந்திரிகா குமரதுங்க ஒப்படைத்துள்ளமையானது பல சந்தேகங்களையும், கேள்விகளையும் எழுப்புபவையாகவுள்ளன. இவை எழுந்தமானவையல்ல. கடந்த கால அனுபவத்தின் அடிப்படையி லானவையே.

ஆயுதப்படைத்தரப்பிடம் நிவாரணப்பணிகள் ஒப்படைக்கப் பட்டமையானது இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு வரும்நிவாரணப் பொருட்கள் தடையின்றி வருவதற்கு நிச்சயமாகத் தடைகளைப் போடும் என்று துணிந்து கூறலாம். அதாவது எதைக் கொண்டு செல்லலாம். எதைக் கொண்டு செல்லக் கூடாது என்பது போன்ற தடைகள் தவிர்க்கமுடியாததாகிவிடும்.

அடுத்ததாக நிவாரணம், புனர்வாழ்வுப் பணிகளுக்குப் பொறுப்பான ஆயுதப்படைத்தரப்பின் பிரசன்னம் இங்கு இருப் பதற்கு வாய்ப்பில்லாததன் காரணமாக விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதியில் நிர்மாண நடவடிக்கைகள் இழுத்தடிக்கப்படலாம் அன்றி இல்லாதேபோகலாம்.

இதேவேளை இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் கூட, தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிவாரணப் பணிகள், விடுதலைப்புலிகளின் நிவாரணப் பணிகள் என்பன பாதிப்பிற்கு உள்ளாகக்கூடும். அதாவது கிழக்கில் தமிழர், முஸ்லிம்கள்,சிங்களவர் மத்தியில் பணிகளை ஆற்றி வரும் த.பு.கழகத்தின் செயற்பாடுகளுக்கு ஆயுதப்படைத் தரப்பால் இடையூறுகள் தடைகள் தோற்றிவிக்கப்படலாம். இதற்கான அங்கீகாரத்தை சந்திரிகாவின் தற்போதைய அறிவிப்பு வெளிப் படுத்துகின்றது.

இந்த வகையில் சனாதிபதி சந்திரிகா குமரதுங்கவின் இப்பரிந் துரையானது ஒருவகையில் தமிழ்மக்களுக்கான நிவாரணப்பணிகள் மற்றும் புனர்வாழ்வுப்பணிகள் என்பனவற்றை ஒரு கட்டுப்பாட்டிற்குள் அதாவது மட்டுப்படுத்தும் வகையான நடவடிக்கையே ஆகும்.

சனாதிபதி சந்திரிகா தனது மூக்குப் போனாலும் பரவாய் இல்லை. மற்றவர்களுக்கு சகுனப்பிழையாக இருந்தால் சரி எனச் சிந்திப்பவர். ஆகையினால் அவர் தமக்கு அவப் பெயர் ஏற்பட்டாலும் பரவாய் இல்லை. தமிழ் மக்களுக்கான நிவாரணப்பணிகள் மட்டுப் படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் ஆயுதப் படையினரை நிவாரணப் பணிகளுக்குப் பொறுப்பாக நியமனம் செய்யத்தக்கவர். இது ஒருவகை ஒடுக்கு முறைக்கான செயற்பாடே. அதாவது ஆயுதங்களைக் கொண்டு மேற்கொள்வது மட்டும்தான் ஒடுக்குமுறை என்பதல்ல உரிய நிவாரணங்கள் கிடைக்கப்பெறாமல் செய்வதும் ஒரு வகை ஒடுக்கு முறையே .

# அம்பாறையில் பாடசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நிவாரணப்பொருட்கள் விசேட அதிரடிப்படையினரால் அபகரிப்பு

திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்காக விநாயகபுரம் சக்தி வித்தியாலயம், திருக்கோவில் கள்ளியந்தீவு வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நிவாரண உதவிப் பொருட்களை இலங்கை விசேட அதிரடிப்படையினர்நேற்று முன்தினம்அபகரித்துச் சென்றுள்ளனர்.

முன்னதாக 02 உழவு இயந்திரங்களில் கொண்டு செல்லப்பட்ட நிவாரணப் பொருட்களையும் விசேட அதிரடிப் படையினர் மிரட்டிப்பறித்துள்ளனர். அத்துடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக தொண்டர்களையும் பயமுறுத்தி நிவாரணப்பணிகள் செய்யவிடாது தடுத்துள்ளனர்.

அம்பாறை அலைகளில் கொடூரத்தினால் அகதிகளாக்கப் பட்டுள்ள தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அரச உதவிகள் முழுமையாகக் கிடைக்காத நிலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கிவரும் நிவா ரணப் பொருட்களையும் மக் களுக்கு கிடைக்காது தடுப்பதி லேயே விசேட அதிரடிப் படையினர் தீவிரம் காட்டி வருகின்றமை மனிதாபிமானமற்ற செயலாகும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்கும் அற்ப சொற்ப உதவிகளைக்கூட இல்லாமற் செய்வதை யாருமே சகிக்க முடியாது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டும் துன்பப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பணியை தொடர்ந்து வழங்கும் என்றும் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டுத் துருப்புக்கள் வருகையால் நாட்டின் இறைமைக்கு குந்தகமில்லை

### எதிர்க்கட்சித்தலைவர்கூறுகிறார்

நாட்டில் ஏற்பட்டுள்ள பேரழிவை சீர்செய்வதற்காகவே வெளிநாட்டுத்துருப்புக்கள் இங்கு வந்துள்ளன. இத் துருப்புக்கள் வருகையால்இறைமைக்கு எந்த வித குந்தகமும்மில்லை ஆனால் வெளிநாட்டுத்துருப்புக்களால் பாதுகாப்புக்கு பிரச்சினைகள் எழுந்தால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுப்பேன்.

இவ்வாறு வடமராட்சிக்கு விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நண்பகல் நெல்லியடியில் உள்ள தேசிய எழுச்சிப் பேரவையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது கூறினார்.

சுனாமி கொந்தளிப்பு அனர்த்தங்களை வல்வெட்டித்துறை தொடக்கம் பருத்தித்துறை வரையான கரையோரப்பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டபின்னர். இச்சந்திப்பு நடைபெற்றது.

இச் சந்திப்பின்போது அவர் மேலும் கூறியதாவது; எம்மிடம் உள்ள பொலிசார் வேறுவேலைகளை கவனிக்க வேண்டியுள்ளது. படையினரும் போதுமானதாக இல்லை அனர்த்தப்பாதிப்புக்களை சீர்செய்ய பல வசதிகள் வெளிநாட்டுத் துருப்புக்களிடம் உண்டு அதைத் தான் இங்கு பயன்படுத்தி அனர்த்தப் பாதிப்புக்களை சீர் திருத்தங்கள் செய்ய வேண்டியுள்ளது. இவர்களின் வருகைபாதுகாப்பை பாதிக் காது, சமாதானத்தையும் குலைக் காது பாதுகாப்பையும், சமாதானத்தையும் வெளிநாட்டுத் துருப்புக்கள் வருகை பாதிக்குமானால் அவற்றுக்குரிய நடவடிக்கைகளை எடுப்பேன்.

புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையுடன் தான் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். புலிகளின் கோரிக்கைகளை நாம் ஆதரிக்கின்றோம். அன்றும் இதைத்தான் சொன்னோம், இன்றும் இதையே சொல்கின்றோம். சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதும் விடுதலைப்புலிகள் ஓடோடி வந்து முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் எல்லா மக்களுக்கும்தேவையான உதவிகளை வழங்கி சமுகத்திற்கு நல்ல சேவைகள் செய்கின்றார்கள் இதனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

வடக்கு,கிழக்கு, தெற்கு ஆகிய பிரதேசங்கள் அழிந்து விட்டன அப்பிரதேசங்களை நிர்மாணிக்கவேண்டும் இங்கே போலதான் தென்பகுதியிலும் பாதிக்கப்பட் மக்களுக்கு முதலில் சமூகஅமைப்புக்களே உதவின அதன் பின்னரே அரசு உதவிகள் வழங்க முன்வந்தது.

துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ள நிவாரணப்பொருட்கள் இன்னமும் வடக்கிற்கு வந்துசேரவில்லை. 'என்பதை நான் அறிவேன் அத்துடன் நிவாரணப் பணிகளை படையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக இங்கு நான் அறிந்தேன் இவைகுறித்து அரசுடன்பேசுவேன். சுனாமி அனர்த்தம் அனர்த்தப் புனர்வாழ்வு மேம்பாட்டிற்கென சகல கட்சித் தலைவர்களைக் கொண்ட குழுதான் மேற்கொண்டு வருகின்றது. எமது கட்சியின் சார்பில் கருஜெயசூரிய இருந்து வருகிறார் இப்பிரச்சினைகளை அங்கு பேசுவோம்.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கு உடனடியாக செல்லும் உத்தேசம் இல்லை ஆனாலும் அங்கு செல்ல இருக்கின்றேன் என்றார். (கா)

# பாதிக்கப்பட்ட பிரதேசங்களை துப்பரவாக்கும் பணிக்கு வருக

### -பொது அமைப்புக்களுக்கு அழைப்பு

கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைத் துப்புரவு செய்து ஒழுங்கமைக்கும் பணியில் ஈடுபட வருமாறு பொது அமைப்புகளுக்கு சர்வதேச மாணவர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாகத் தெரிவிக்கையில், இயற்கை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட எமது பிரதேசங்களில் மீட்புப் பணியும், துப்புரவுப் பணியும், தொற்று நோய்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளும் அவசரமாக மேற்கொள்ளவேண்டியுள்ளது. அன்பான உறவுகளே! மக்கள் இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாக்கப்பட்டபோது உணவென்றும், உடை யென்றும், அனைத்து உதவிகளையும் விரைந்து செயற்படுத்திய நீங்கள் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதேசங்களையும் திருத்தி அமைக்க வாருங்கள். எமது மக்களுக்கான பணிகளை நாமே செயற்படுத்த வேண்டியுள்ளதால் அனைத்து கல்வி நிறுவனங்கள், பொது நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள் என்பவற்றைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து மக்கள் பணியில் ஈடுபட்டுவரும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின ருடன் தொடர்பு கொண்டு வாகன வசதிகளைப் பெற்று இந்த அளப்பரிய மக்கள் பணிக்கு முன்வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். காலத்தின் தேவையுணர்ந்து செயற்படுமாறு அனைவரையும் வேண்டி நிற்கின்றோம் எனக் கேட்கப்பட்டுள்ளது. (36)

# இந்திய தேசியப்பாதுகாப்பு ஆலோசகராக நாராயணன்

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக முன்னாள் புலனாய்வுத்துறை தலைவர் எம்.கே.நாரயணன் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது பிரதமரின் விசேட செயலாளராகக் கடமையாற்றிவரும் நாராயணன் இந்தியாவின் பாதுகாப்புத் துறையின் மிகவும் முக்கியத்துவம் மிக்கவராகக் கருதப்படுகின்றார்.பனிப்போர் காலத்தின் பின்னரான இந்திய வெளிவிவகார கொள்கை வகுப்பாளர்களின் ஒருவராகக் கருதப்படும் ஜே.என்.டிக்சித்தின் மறைவானது இந்திய பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான சமாதான பேச்சுவார்தைகளைத் தாமதப்படுத்தும் என இந்திய ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (32)

# அதிரடிப்படையினர்-புலிகள் அக்கரைப்பற்றில் சந்திப்பு

அக்கரைப் பற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நேற்றைய தினம் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினருக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது.11 மணியளவில் நடைபெற்ற இச் சந்திப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் இனிமேலும் நடைபெறக்கூடாது என விடுதலைப்புலிகள் வலியுறுத்தியுள்ளனர்.விடுதலைப்புலிகள் தரப்பில் மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்,அம்பாறை அரசியல்துறைப்பொறுப்பாளர் குயிலின்பன், மற்றும் மனோச் ஆகியோர் கலந்து கொண்டனர்.அதிரடிப்படை தரப்பில் அம்பாறை விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி உப்புள்சௌவிரத்ன, திருக்கோயில் படைமுகாம் அதிகாரி ரத்நாயக்க, கல்முனை எஸ்.எஸ் .பி. லீவன்மை ஆகியோர் பங்கேற்றனர்.

# அமெ.யுத்தக் கப்பல் 1300 படையினருடன் இவ்வார இறுதியில் இலங்கை வருகின்றது

அமெரிக்காவின் யூ.எஸ்.எஸ். ரஷ்மோர் என்ற யுத்தக் கப்பல் இந்த வார இறுதியில் இலங்கையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் கப்பலில் 1300 அமெரிக்கக் கடற்படையினர் இலங்கைக்கு வருகைதருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்தக் கப்பல் 186 மீற்றர் நீளமானது உலங்குவானூர்ருதி தரையிறங்கக்கூடிய இரண்டு இறங்கு தளங்கள் உள்ளன. இந்தக் கப்பல் மணிக்கு 22 கடல் மைல் வேகத்தில் பயணம் செய்யக் கூடியது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கப்பலில் 20 உலங்கு வானூர்திகள் மற்றும் கனரக வாகனங்கள் என்பன எடுத்துவரப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு 20 எம்.எம் வியூக சுடுகலன்கள் மற்றும் 25 எம்.எம் பீரங்கிகள் இரண்டு, 50 கலிபர் தானியங்கி சுடுகலன்கள் ஆறு மற்றும் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இரண்டு என்பன பொருத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை அமெரிக்க விமானப்படைக்குச் சொந்தமான விமானங்கள் மூலம் இலங்கைக்கு எடுத்துவரப்பட்டுள்ள பிளக் ஹவாக் வகை உலங்குவானூர்திகள் நேற்று முன்தினம் கட்டுநாயக்கப் பகுதியில் பரீட்சார்த்தப் பறப்பினை மேற்கொண்டுள்ளன..

கடந்த திங்கள் 42அமெரிக்கப் படையினரும், நேற்று 30 படையினரும் இலங்கைக்கு விமானங்கள் மூலம் வருகைதந்துள்ளனர். இவர்கள் கட்டுநாயக்கப் பகுதியில் தற்காலிக முகாம் ஒன்றை அமைத்துள்ளதாகவும் இந்த முகாமின் ஊடாகவே மீட்புப் பணிகள் ஒருங்கிணைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்குக் கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மீட்புப் பணிகளில் அமெரிக்க துருப்பினர் ஈடுபடுத்தப்படமாட்டார்கள் என்று தெரியவந்துள்ளது (32)

# நலன்புரி நிலையங்களில் படையினர் நிர்வாகம் மக்களை ஆத்திரமடைய வைத்துள்ளது

## சந்திரிகாவுக்கு இராசம்பந்தன் கடிதம்

வடக்குக்கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளற்ற பகுதிகளில் உள்ள நலன்புரி நிலையங்களை ஆயுதப்படையினரால் நிர்வகிக்க நீங்கள் உத்தரவிட்டுள்ளீர்கள், வடக்குக் கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில்லாத பகுதியில் உள்ள நலன்புரிநிலையங்களில் 95வீத மக்கள் தமிழ் பேசும் மக்கள் திருகோணமலையில் உள்ள நலன்புரிநிலையங்களிற்கு ஆயுதப்படையினர் ஆயுதங்களுடன் அந் நிலையங்களில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர பிரவேசித்துள்ளதான அறிக்கைகள் எனக்குக் கிடைத்துள்ளன. இந் நடவடிக்கையால் அந்த நலன்புரி மக்கள் ஆத்திரமடைந்துள்ளனர் சில நலன்புரிநிலையங்களில் இதனால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. என திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா சம்பந்தன் சனாதிபதி சந்திரிக்காவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். இந் நலன்புரி நிலையங்கள் பிரதேச ரீதியாக தமிழர்புனர்வாழ்வுக்கழக, வெகுசன அமைப்புகளின் அங்கத்தவர்களால் விடுதலைப் புலிகளின், பொதுமக்களின் உதவியுடன் நிர்வகிக்கப்படுகின்றது. அங்கே இவ்வாறான ஒரு தலையிடலிற்குக் காரணம் இல்லை. மாவட்ட செயலணியினரால் திருகோணமலையில் அதன் இறுதியாக நடைபெற்ற கூட்டத்தில் ஒவ்வொரு நலன்புரி நிலையங்களிற்கும் அதை நிர்வகிக்கும் குழுவினை நியமித்தது. வடக்குக் கிழக்கு நலன்புரி நிலயங்களில் தமிழ் பேசும் மக்கள் பொதுமக்களின் நிர்வாகத்தின் கீழேயே இருக்கவேண்டும். அவ்வாறான பொது மக்களின் நிர்வாகத்தை முன்னேற்றுவதற்கான அனுபவம் வாய்ந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

சிறிலங்காப் படையினரில் 100 வீதமான சிங்களவர்கள் என்பதை மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றேன். இரண்டு தசாப்தபோரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் சிறிலங்கா இராணுவத்தினரின் கைகளினால் பலியாகியுள்ளனர். இந் நினைவுகள் அழிவதற்கு நீண்டகாலம் தேவை ஆயுதப் படையினரின் வடக்கு கிழக்கு மாகாண நலன்புரி நிலைய நிர்வகிப்பு இது வரையில் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் பயனற்றதாக்கிவிடும்.

வடக்குக்கிழக்கில் தங்களது மேற்படி உத்தரவை இரத்துச் செய்யும்படி மனப்பூர்வமாகக் கேட்டுக் கொள்கின்றேன் என அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### மாதிரிக்...

வைக்கப்பட்டுள்ள மக்களை மீண்டுமொரு முறை அலையின் தாக்கத்திற்குள்ளாகாதவாறு கடற்பெருக்கால் பாதிக்கப்படாத பகுதி முல்லைநகரை அண்டிய பகுதிகளில் மக்களின் விருப்பத்திற்கமைவாக இடங்கள் தெரிவு செய்யப்பட்டு முகாமை அமைக்கும் பணியில் துரித கதியில் ஈடுபடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன.

இதற்கமைவாகக் கள்ளப்பாடு கிராமத்தைச் சேர்ந்த 360 குடும்பங்களை உண்ணாப்பிளவையில் உள்ள அரச தனியார் காணிகளிலும் மணற்குடியிருப்பைச் சேர்ந்த 200 குடும்பங்களை கரைச்சிக் குடியிருப்புப் பகுதியிலும், செல்வபுரத்தைச் சேர்ந்த 225 குடும்பங்களை செல்வபுரத்தின் ஒருபகுதியிலும், வட்டுவாகல் பகுதியிலும், கோயில் குடியிருப்பு மற்றும் முல்லைப்பட்டினம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 100 குடும்பங்களை முல்லை நகரை அண்டிய பாதிக்கப்படாத பகுதியிலும், வண்ணாங்குளம் பகுதியைச் சேர்ந்த 200 குடும்பங்கள் முல்லை ஐஸ் தொழிற்சாலைப் பகுதியிலும் சிலாவத்தை மற்றும் தீர்த்தக்கரை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 100 வரையான குடும்பங்களை முல்லைத்தீவு அன்னம்மாள் கோவிலுக்கருகில் உள்ள பகுதியிலும், சிலாவத்தை தெற்கு மற்றும் தியோகுநகர் பகுதிகளைச் சேர்ந்த 80 குடும்பங்களை சுவாமித் தோட்டப் பகுதியிலும், உப்புமாவெளியைச் சேர்ந்த 25 குடும்பங்களை உப்புமாவெளி பொதுநோக்கு மண்டபத்திற்கருகில் உள்ள காணிகளிலும் அளம்பில் வடக்குப் பகுதியைச் சேர்ந்த 200 குடும்பங்களை அளம்பில் பெருந்தோட்டப் பகுதியிலும். செம்மலை, நாயாறு கிராமங்களைச் சேர்ந்த 100 குடும்பங்களை சபாரத்தினம் தோட்டப் பகுதியிலும் அப்பலவன் பொக்கணை மாத்தளன் பகுதிகளைச் சேர்ந்த 170 குடும்பங்களை மாத்தளன் பிள்ளையார் கோவிலடியிலும், முள்ளிவாய்க்கால் மற்றும் பனையடிப் பகுதிகளைச் சேர்ந்த 80 குடும்பங்களையும் முருகன் கோவிலடியிலும் வலையர்மடம் பகுதியைச் சேர்ந்த 45 குடும்பங்களை வலையர் மடம் பகுதியிலும் தற்காலிக குடியிருப்புக்கள் அமைத்து குடியமர்த்தப்படவுள்ளனர்.

இக்குடியிருப்புக்கள் அனைத்தும் சுகாதார முறையினைப் பேணக்கூடியதாகவும், மலசலகூடம், பொதுநோக்கு மண்டபம் முன்பள்ளி ஆகிய வசதிகளைக் கொண்டதாக அமைவதோடு மின் ஒளிர் விளக்குகள் பொருத்தப்பட்டு ஒளியூட்டக்கூடிய வகையிலும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதேவேளை இக்குடியிருப்புக்கள் அனைத்தும் இன்றிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் அமைக்கப்பட்டு மக்கள் குடியமர்த்தப்படுவர். எனவும் இத் தற்காலிக வீடுகளில் ஏறத்தாழ ஆறு மாதங்கள் வரை மக்கள் குடியிருக்க நேரிடலாம் எனவும் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி குறிப்பிட்டார். அத்தோடு அலையின் தாக்கத்திற்குட்படாத பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள், சுகாதாரப் பிரிவினரின் சுகாதார நலன் பற்றிய உறுதிப்படுத்தலைத் தொடர்ந்து இன்று தொடக்கம் குடியமர்த்தப்படுவர். எனவும்கூறினார். இக்கலந்துரையாடலில் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களும் தமிழீழ திட்டமிடல் செயலக பிரதிப் பணிப்பாளர் மாறன், முல்லைமாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன், தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் இளஞ்சேரன், தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர், முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியராசா, மற்றும் உதவி அரச அதிபர்கள், மத குருக்கள், முல்லை மின்சார சபை அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், போராளிகள், பொது மக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டு தமது ஆலோசனைகளையும் வழங்கினர் இக்குடியமர்வுத் திட்டத்தினைத் தொடர்ந்து நிரந்தர குடியிருப்புக்கள் அமைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச)

### படையினர்...

புரையின்பேரில் முகாம்களைப் பொறுப்பேற்கப்போவதாக தெரிவித்துள்ளனர்

இதனையடுத்து இது தொடர்பில் தமது தலைமைப் பீடத்துடன் பேசி பின்னர் பதில் அளிப்பதாகத் தெரிவித்த திருகோணமலையின் அரசியல் துறை பொறுப்பாளர் சி.எழிலன் அதன்படி தமிழர் புனர்வாழ்வு கழகம் தாம் நிர்வகித்து வந்த முகாம்களைத் தொடந்தும் நிர்வகிக்கும் என போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவுக்கு அறிவித்துள்ளார். (32)

### இலங்கைக்கான...

இச் சந்திப்பில் யாழ்.மாவட்ட ஆயர் தோமஸ்சௌந்தரநாயகம், மற்றும் வட-கிழக்கு மனித உரிமைகள் செயலக இயக்குனர் மரியாம்பிள்ளை கருணாரட்ணம் அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டனர்.(கு)

### வீரவணக்கம்...

(ஜெயானந்தன் அன்ரனி சாள்ஸ், செல்வபுரம், முல்லைத்தீவு) என்பவரே சாவடைந்தவராவார்.

26-12-2004 அன்று முல்லைத் தீவுப் பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார். நாட்டுப்பற்றாளர். பிலோமினம்மா / பவா (திருமதி பிலோமினம்மா ஜோர்ஜ் சற்கோட்டை அல்வாய் வடமேற்கு; பருத்தித்துறை, யாழ்ப்பாணம், த.மு. மணற்குடியிருப்பு முல்லைத்தீவு) என்பவரே சாவடைந்தவராவர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### முல்லை...

வினைத் தடுக்கும் நோக்குடன் மீள அமைக்கப்படவுள்ள நகரைச் சரியான திட்டமிடலின் அடிப்படையில் அமைப்பதற்காக வெளிநாட்டில் வசிக்கும் தமிழ்த் திட்டமிடல் அதிகாரிகளும், பொறியிலாளர்களும் நாளை முல்லைத்தீவுக்கு வரவழைக்கப்படுகின்றனர்.

நாளைய தினம் தொடக்கம் முல்லை நகர்ப்பகுதியில் அலுவலகம் அமைத்து அங்கிருந்து அந்நகரை மீளக் கட்டியெழுப்புவதற்கான ஆய்வுகளையும் திட்டமிடல் பணிகளையும், இவர்கள் மேற்கொள்ளவார்கள். இவர்களுடன் முல்லைத்தீவு மக்களின் பிரதிநிதிகளும் இணைந்து செயற்பாடுவார்கள் என கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் தெரிவிக்கின்றார். (ச)

### சர்வதேச...

களால் அதிகரிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. இரண்டு யுத்தக்கப்பல்கள் மூலம் 45 உலங்குவானூர்திகள் 17 சி-13 ரக சரக்கு விமானங்கள் மற்றும் கனரக வாகனங்கள் என்பவை எடுத்துவரப்படுவதாகவும் இந்த வார இறுதியில் இவை இந்து சமுத்திரத்தை வந்தடையும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்தியா 16000 படையினரை இந்த இரு நாடுகளிலும் தரையிறக்கியுள்ளது. இந்தியாவின் 32 கடற்படை கலன்கள் இந்த பகுதியில் மீட்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. பாகிஸ்தன் 400படையினருடன் கப்பல் ஒன்றையும் இலங்கைக்கு அனுப்பியுள்ளது. பிராந்தியத்தின் வறிய நாடாக கருதப்படும் பங்களாதேசும் தனது பங்கிற்கு கப்பல் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது

பிரான்ஸ் உலங்கு வானூர்த்திகளையும் ஜேர்மனி ஒரு விமானம் தாங்கி கப்பல் மற்றும் 14 சி-130 ரகவிமானங்களையும் அனுப்பியுள்ளது. ரஷ்யாவின் மூன்று ஐ.-76 ரக போக்குவரத்து விமானங்கள் மற்றும் ஜப்பானிய கப்பல் ஒன்று என்பன இந்த பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட பகுதியை நோக்கி உலக நாடுகளின் இந்த படை நகர்த்துதல்கள் எதிர்காலத்தில் ஆசிய பிராந்தியத்தை இலக்காக கொண்ட மோதல் ஒன்றிற்கு வழிவகுக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

### வடமராட்சிக்..

கட்சி தலைவரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன். ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் மலிக் சமரவிக்கிரம, டி.எம். சுவாமிநாதன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

காலை 9. 30 மணிக்கு வடமாரட்சி வந்திருந்த இக்குழுவினர் நெல்லியடி மத்திய மகாவித்தியால்ய இடம்பெயர்ந்தோர் முகாமுக்குச் சென்று பார்வையிட்டு இடம்பெயர்ந்தோர்களுடன் உரையாடினார்கள்.

தொடர்ந்து அருகில் உள்ள தேசிய எழுச்சிப் பேரவை அலுவலகத்தில் இயங்கிவரும் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி மனிதாபிமான புனர்வாழ்வுக்கான கருமபீடத்தில் அதற்கான செயலணிப் பிரதிநிதிகளைச் சந்தித்து விபரங்களைக் கேட்டறிந்து கொண்டார். அவர்கள் சமர்ப்பித்த மகஜர்களையும் பெற்றுக் கொண்டார். பின்னர் வல்வெட்டித்துறை தொடக்கம் பருத்தித்துறை வரையான கரையோரப் பகுதியில் ஏற்பட்ட சேதங்கள் அழிவுகளைப் பார்வையிட்டதுடன் பருத்தித்துறை நிலையத்திற்கு அருகிலுள்ள வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாச அலுவலகத்திற்குச் சென்று அதன் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடினார்.

அங்கிருந்து 2ஆம் குறுக்குத் தெரு தும்பளை வழியாக பருத்தித்துறை சிவன்கோவில் கல்யாண மண்டபத்தை ரணில் குழுவினர் சென்றடைந்தனர். அங்கு மீனவர்கள் மத்தியில் அவர் உரையாற்றினார். அங்கு சென்ற அவரை மக்கள் கைகுலுக்கி வரவேற்றனர். அதன் பின்னர் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி புலோலி மெ. மி. பாடசாலை ஆகிய இடம்பெயர்ந்த முகாம்களுக்கு சென்று மக்களைச் சந்தித்து உரையாடினார்கள்.

இறுதியாக நெல்லியடியிலுள்ள கருமபீடத்தில் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் நண்பகல் 1.30 மணியளவில் யாழ். சென்றடைந்தார். (20, 27)


## துயர் பகிர்கின்றோம்

கிளிநொச்சி வீதிஅபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு.வேலுப்பிள்ளை சிவயோகன் அவர்களின் பாசமிகு மாமனார் கந்தர் முருகேசு [ஆவரங்கால்புத்தூர்] அவர்களினதும், அருமை அண்ணன் அமரர் வேலுப்பிள்ளை கருணாநிதி [I.C.M.A விரிவுரையாளர்] அவர்களின் மகன் கருணாநிதி -கஜன் அவர்களினதும் பிரிவையடுத்து எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவர்களது குடும்பங்களுடன் நாமும் துயர்பகிர்கின்றோம். அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்தித்து நிற்கின்றோம்.

எம்.கே.யோகரட்ணம்;
குடும்பம்.

கதிரவேற்பிள்ளை வீதி,
தம்பசிட்டி,
பருத்தித்துறை.

(5530)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.